தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 170 சுபகிருது வருடம், மாசி மாதம் 03ஆம் திகதி புதன்கிழமை
(15.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 23, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

தேர்தல் ஆணைக்குழு நேற்று கட்சியின் செயலாளர்களை சந்தித்து பேசியதல்லவா?

சந்திப்பு ஆரம்பித்த நேரம்முதல் முடியும்வரை தேர்தலை ஒத்திவைப்பது என்ற சாரப்படவே கருத்து வெளியிட்டராம் தேர்தல் ஆணைக்குழுவின் முக்கிய பிரமுகர் ஒருவர். பணம் கிடைத்தால்தான் தேர்தல் நடத்தமுடியுமென்றால் சுயாதீன ஆணைக்குழு அதற்கு அதிரடி நடவடிக்கைகளை எடுக்கலாமே? என்று அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் வினவியபோது அதற்கு பதில் கூறாமல் மழுப்பப்பட்டதாம்.

அரசாங்கத்துக்கு எதிராக நடப்பதுபோல நடந்தாலும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு தேர்தல் ஆணைக்குழு ஒத்தூதுவதாக கூறுகிறார் அந்த அரசியல் பிரமுகர்.

தேர்தலை அரசாங்கம் எதிர்க்கவில்லை

அமைச்சர் பந்துல

நா. தினுஷா

நாட்டில் தற்போதிருக்கும் நிதி நெருக்கடி நிலைமைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகளை வழங்க முடியாது. தேசிய ரீதியாகவே இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும். இற்றிலையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலை நடத்தாமலிருக்க அரசாங்கம் முயற்சிக்காது. தேர்தலை நடத்தாமலிருக்க அரசாங்கம் எதிர்பார்க்கவுமில்லை - என்று அமைச்சருடன் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரேஹென்பிட்டியிலுள்ள அரசாங்கத் தகவல் தினைக்களத்தில் ...

02 பக்கம்

உள்ளூராட்சித் தேர்தல் தள்ளிப் போகிறது!

தபால்மூல வாக்களிப்பு காலவரையின்றி ஒத்திவைப்பு
தேர்தல் ஆணைக்குழு அரசியல் கட்சிகளிடம் அறிவிப்பு

நமது விசேட செய்தியாளர்

நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த பல்வேறு தடைகள் காணப்படுவதாக அரசியல் கட்சிகளிடம் தேர்தல் ஆணைக்குழு நேற்று (14) தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்கெடுப்புக்கு இன்னும் ஒருவாரமே எஞ்சியுள்ள நிலையில், அதற்கான வாக்குச்சீட்டுகளை திட்டமிட்டபடி வழங்க முடியாமற்போனமையை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கும்...

» 02 பக்கம்

தேர்தல் ஒத்திவைப்பு ஆபத்தானது

பெவ்ரல் அமைப்பு

கே. சபானி

''வரலாற்றில் முதன்முறையாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வாக்குச்சீட்டுகள் அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் எந்தவொரு ஆட்சியாளரும் பொருளாதார நிலைமையை காரணங்காட்டி எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்கக்கூடிய நிலை ஏற்படும் அபாயமுள்ளது.'' - இவ்வாறு பெவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

வாக்குச்சீட்டு அச்சிடும் செலவுக்கான பணம் பெற்றுக்கொடுக்கப்படாமையால் அந்தப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. வரலாற்றில் முதன்முறையாக இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது.

அனைத்து தேர்தல்களின்போதும் அரசாங்கத்தால்...

» 02 பக்கம்

கடன் மறுசீரமைப்புக் கூட்டம் வெள்ளியன்று

இந்தியா, சீனா, சவூதியுடன் ஏழு நாடுகள் பங்கேற்பு

இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு குறித்து ஆராயும் வகையில் முக்கியமான கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் இதில் இந்தியா, சீனா, சவூதி அரேபியா மற்றும் ஏழு நாடுகள் பங்கேற்கவுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

முதல் தடவையாக நேரடி வட்டமேசை மாநாடாக இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

» 02 பக்கம்

அரசாங்கத்தின் சதியால் ஆணைக்குழு பலவீனம்

வீதிக்கு இறங்கிப் போராட வேண்டுமென்கிறார் மனோ

நா. தினுஷா

அரசாங்கத்தின் சதித் திட்டத்தால் தேர்தல் ஆணைக்குழு பலவீனமடைந்து செல்வதுபோல் தெரிகின்றது. இற்றிலையில், தேர்தல் ஆணைக்குழுவின் எந்தவொரு வழக்கின் சார்பிலும் ஆஜராகப் போவதில்லையென்று சட்ட மா அதிபர் தினைக்களமும் அறிவித்திருக்கிறது. இந்தத் தடைகளை மீறி தேர்தல் உரிமையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமெனில், வீதிக்கு இறங்கிப் போராடியே ஆகவேண்டும் - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

» 02 பக்கம்

மின்சார சபை - ஆணைக்குழு கட்டண முரண்பாடு நீடிப்பு

இன்று இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளதாக தேசிய பேரவைக்கு அறிவிப்பு

மின்சாரக் கட்டணம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபை இணைந்து நடத்திய கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி நிறைவடைந்ததாக இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் நேற்று (14)...

» 02 பக்கம்

முதல் காலாண்டுக்குள் ஐ.எம்.எவ். நிதி உதவி

தவறும் பட்சத்தில் நாடு முடங்கும் என அரசு அறிவிப்பு

நா. தினுஷா

நடப்பாண்டின் முதல் காலாண்டு நிறைவடைவதற்கு முன்னர் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நிறைவுசெய்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்திருக்கிறது.

» 02 பக்கம்

38 மில். டொலர் ஜப்பான் உதவி

அத்தியாவசிய மற்றும் அவசரகால சுகாதார சேவைகளை தடையின்றி மேற்கொள்வதற்காக ஏரிபொருளை கொள்வனவு செய்வதற்கு 38 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க ஜப்பான் அரசாங்கம்...

02 பக்கம்

பொரளை துப்பாக்கிப் பிரயோகத்தில் இளம் யுவதி பரிதாபப் பலி

இராணுவச் சிப்பாய்கள் இருவர் கைது

பொரளை, வனாத்தமுல்லை பகுதியில் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்ய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு (13).

» 02 பக்கம்

துருக்கி - சிரியாவில் 70 இலட்சம் சிறுவர்கள் பாதிப்பு

12 பக்கம்

நிலக்கரி கப்பல்களுக்கு செலுத்த நிதித் தட்டுப்பாடு

நாளாந்தம் 80 ஆயிரம் டொலர் செலுத்தவேண்டிய நிலை

நாட்டுக்கு வந்தடைந்துள்ள இரண்டு நிலக்கரி கப்பல்களுக்கு செலுத்துவதற்கு நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நிலக்கரி நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தக் கப்பல்கள் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நாட்டை வந்தடைந்ததாக நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார்.

» 02 பக்கம்

எதிர்க்கட்சித் தலைவரால் நாட்டுக்குப் பெரும் பாதிப்பு

அறிவு தொடர்பில் ஆச்சரியமாக இருப்பதாக பந்துல பரிகாசம்

நா. தினுஷா

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாட்டுக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் அதன் நிலைப்புக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலேயே கருத்து தெரிவித்து வருகிறார். வங்கி வட்டி வீதம் தொடர்பில் அரசியல்வாதிகளே தீர்மானிக்கிறார்கள் என்று கருதுவாராக இருந்தால், அவரின் பாந்துபட்ட அறிவு தொடர்பில் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

» 02 பக்கம்

நெடுமாறனிடம் விசாரணை நடத்தத் தயாராகும் பொலிஸ்

தகவல் திரட்டும் மத்திய, மாநில உளவுப் பிரிவுகள்

திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளதாக பழ.நெடுமாறன் தெரிவித்ததைத் தொடர்ந்து, அது தொடர்பான தகவல்களை இந்தியாவின் மத்திய, மாநில...

» 02 பக்கம்

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் கிடையாது

அமைச்சர் பந்துல

நா. தினுஷா

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் நலமுடன் இருப்பதாக உலகத் தமிழர் பேரவையின்...

» 02 பக்கம்

பிரபாகரன் உயிருடன் என்பது கேலிக்குரியது

பாதுகாப்பு அமைச்சு

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருப்பதாக உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் குறிப்பிட்ட கருத்தை முற்றாக மறுத்துள்ள பாதுகாப்பு அமைச்சு, அது கேலிக்குரியது எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் கேர்ணல் நளின் ஹேரத், பிரபாகரன் உயிரிழந்துவிட்டதாக உடற்கூற்று பரிசோதனை மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

» 02 பக்கம்

எதிர்க்கட்சித்...

ஒருவேளை அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தால் இரு வாரங்களுக்கு மேல் நாட்டை முன்னெடுத்திருக்க முடியாது. நாட்டின் பிரச்சினைகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துக்கு அப்பாலான மாற்றுத் தீர்வுகள் தன்னிடம் இருக்குமாக இருந்தால் அதனை பாராளுமன்றத்துக்கும் சர்வதேசத்துக்கும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

அரசாங்கம், வங்கிக் கடனை அதிகரித்து பொருளாதாரத்தை சுருக்க முயற்சிப்பதாக சஜித் பிரேமதாச குறிப்பிடுகிறார். சுருக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை விரிவாக்கம் செய்வதே நாட்டை கட்டியெழுப்ப முயற்சிப்பதாகும். வங்கிக் கடன் வட்டி வீதத்தை தீர்மானிப்பது அரசாங்கத்தின் கடமையல்ல.

எதிர்க்கட்சித் தலைவருக்கு அவரின் விடயப் பொறுப்பு தொடர்பில் இருக்கும் அறிவின் அடிப்படையிலேயே அவர் இவ்வாறு அறிவித்திருக்கிறார். கடந்த வருடங்களில் கடன் வட்டி வீதம் தனி இலக்கங்களில் இருந்தன. அவ்வாறு தனி இலக்கங்களில் இருந்த வட்டி வீதமானது இரட்டை இலக்கங்களாக மாறியதால், வீட்டுக் கடன், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர், பாரியளவான வியாபாரங்களை முன்னெடுப்பவர்கள், முதலீட்டாளர்கள் என சகல தரப்பினருக்கும் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. 28 – 30 சதவீதமாக கடன் வட்டி வீதம் அதிகரித்திருக்கிறது.

இதனை அரசியல்வாதிகளே தீர்மானிக்கிறார்கள் என்று சஜித் கருதுவாராக இருந்தால், அவரின் பரந்துபட்ட அறிவு தொடர்பில் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு நாட்டின் நிதி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மத்திய வங்கி, வங்கிக் கடன் வட்டி வீதங்களை தீர்மானிக்கும். கொள்கை அடிப்படையிலான வட்டி வீதம் என்று ஒருவிடயம் இருக்கிறது. இந்தக் கொள்கை அடிப்படையிலான வட்டி வீதமானது மத்திய வங்கியினால் இடைக்கிடை அறிவிக்கப்படும். இதில் அரசியல்வாதிகள் தலையிடுவதில்லை. மத்திய வங்கியே இந்த விடயம் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும். அரசாங்கத்தினால் கடன் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டு, அதனூடாக பொருளாதாரம் சுருங்குகின்றது என்பதன் பொருள் எனக்கு புரியவில்லை. இதனால், மக்களின் கவனமே திசைத்திருப்பப்படுகிறது.

நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மற்றும் வரி மறுசீரமைப்புக்கொள்கை தொடர்பில் மீளாய்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சஜித் கூறுவராக இருந்தால், அவர் நாட்டுக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் அதன் நிலைப்புக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலேயே கருத்து தெரிவித்திருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்துடன் இந்தளவு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் பரிந்துரைகளை நிறைவேற்ற நாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்குமான பொறுப்பை எதிர்க் கட்சி பொறுப்பேற்க வேண்டிய அவசியமில்லை. நாடு இந்தளவு நெருக்கடியை சந்தித்ததன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல் எதுவுமின்றி மாற்று வழிமுறைகளினூடாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக அவர் பாராளுமன்றத்துக்கும் உலகுக்கும் உறுதியாகவும் பிரசித்தமாகவும் குறிப்பிட வேண்டும்.

இதற்கு மாற்று வழிமுறை இருக்குமாக இருந்தால் அதனை நடைமுறைப்படுத்த தயாராக இருக்கிறோம். சர்வதேசத்தின் முன்னால் எனது வீரமகிமையை காட்ட முடியாது. உலகத்தின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் சர்வதேச நாணய நிதியமே தீர்மானிக்கின்றது. நாமும் அதில் அங்கத்துவ நாடு. அவர்களுக்கு நாம் பாடம் கற்பிக்க முடியாது. எம்மீதான பல்வேறு விமர்சனங்களும் அவர்களிடம் இருக்கின்றன. இந்நிலையில், சர்வதேச நம்பிக்கை, நாணய நிதியத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற முடியவில்லை என்றால் சர்வதேசத்தில் எந்த கொடுக்கல் வாங்கலையும் முன்னெடுக்க முடியாது. ஒருவேளை, சஜித் ஆட்சியிலிருந்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின்றி நாட்டை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்திருந்தால் இரு வாரங்களின் பின்னர் நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான மாற்று முறையொன்று இல்லாமல் போயிருக்கும் என்றார்.

பிரபாகரன்...

பிரபாகரன் எங்கிருக்கிறார் என்ற விபரத்தை பழ.நெடுமாறன் பகிர்ந்துகொள்ளவில்லை.

உறுப்பினர்களான கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் தயா மாஸ்டர் ஆகியோர் பிரபாகரனின் சடலத்தை அவதானித்து அவர் இறந்துவிட்டதை உறுதிப்படுத்தினர் எனத் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி...

இலங்கை மின்சார சபை குறிப்பிட்ட தொகை பணத்தை வழங்கியுள்ளபோதிலும் அது போதுமானதாக இல்லையென அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கப்பல்களுக்கு தாமதக் கட்டணமாக நாளாந்தம் 80ஆயிரம் டொலர்கள் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கடன் மறுசீரமைப்புக்...

இந்தக் கூட்டத்தை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஜீ20 நாடுகளின் தலைமையை ஏற்றிருக்கும் இந்தியா ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

கடன்களைக் கோரிய நாடுகளான எத்தியோப்பியா, சாம்பியா, கானா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். மேலும், மத்திய வருமானம் கொண்ட நாடுகளான இலங்கை, சுரிநாம், ஈக்குவடோர் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜீ20 நாடுகளின் கூட்டத்தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை இந்தியாவின் பெங்களூருவில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக கடன் வழங்கல் தொடர்பான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின்...

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் இடையில் நேற்று (14) இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் சுயாதீனமாக போட்டியிட்டு பிரசாரங்களை முன்னெடுத்து ஜனநாயக ரீதியாக வெற்றிப்பெறுவதே வழமையாகும். ஆனால், இலங்கையில் தேர்தலை நடத்துமாறுகோரி கட்சி பேதமின்றி வீதிக்கிறங்கி போராடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா உள்ளிட்ட அந்தக் குழுவின் உறுப்பினர்கள் இதுவரையில் அவர்களுக்கு வந்த சவால்களை எதிர்கொண்டு தற்போதைய நிலைமையை அடைந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை பாராட்ட வேண்டும். அவர்கள் ஜனநாயகத்துக்காக போராடுவதும் தெளிவாக தெரிகிறது.

இருந்தபோதும், தற்போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பலவீனமடைந்து செய்வதறியாமல் இருக்கிறார்கள். சட்டமா அதிபர் தேர்தல் ஆணைக்குழுவின் சார்பாக எந்தவொரு வழக்கிலும் ஆஜராகப்போவதில்லை என்று அறிவித்துள்ளதாக நிமால் புஞ்சிஹேவா பகிரங்கமாக அறிவித்தார். இதுவே தற்போதைய நிலைமையாகும்.

ஒருபுறம் நிதி கிடைக்காவிட்டால் வாக்குச் சீட்டுகளை அச்சிட மாட்டோம் என்று அச்சகத் திணைக்களம் அதிகாரபூர்வமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருக்கிறது. இந்த பின்னணியில் இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு வழங்குவது என்பதை அறியாமல் அவர்கள் இருக்கிறார்கள். அனைத்து கட்சிகளினதும் நிலைப்பாடுகளையும் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்டோர் கேட்டு அறிந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார ஆகிய இருவரும் எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லை. ஆகவே, திரைக்கு பின்னால் சதித்திட்டங்கள் இடம்பெறுகின்றமை தெளிவாக தெரிகிறது. தேர்தல் இடம்பெறவேண்டுமென்றால், வீதிக்கு இறங்க வேண்டும் என்பதே நிலைப்பாடாக இருக்கிறது.

38 மில். டொலர்...

இணைக்கம் வெளியிட்டுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நாரஹேன்பிட்டியிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (14) இடம்பெற்றபோதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த நிதி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். அதன்படி இதற்குத் தேவையான உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்புக்கு...

தலைவர் பழ.நெடுமாறன் கூறுவாராக இருந்தால் அது அவரின் கருத்துரிமை என்றும் நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான அச்சுறுத்தல் எதுவும் தேசிய பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடப்பட்டிருக்குமாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் அதற்கான பொறுப்பை ஏற்று செயற்படுவார்கள் என்றும் அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருகிறது. ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் வாராந்தம் பாதுகாப்புச் சபைக் கூட்டம் இடம்பெற்று வருகின்றது. அதன்போது கிடைக்கப்பெறும் புலனாய்வுத் தகவல்கள் பொறுப்புடன் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

நாட்டை பாதுகாத்துக்கொண்டு, நாடு பிளவுபடாமல் சகல மக்களின் மத்தியிலும் நல்லிணக்கத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தும் வகையில் தேசிய பாதுகாப்புச் சபையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சரவை அறிந்து வைத்திருக்கிறது.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான கலந்துரையாடல்கள் எதுவும் இடம்பெற்றிருக்குமாக இருந்தால், பாதுகாப்புச் சபை என்ற அடிப்படையில் அதற்கான பொறுப்பை ஜனாதிபதியும், பிரதமரும் ஏற்று செயற்படுவார்கள் என்றார்.

தேர்தலை அரசாங்கம்...

நேற்று (14) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலை நடத்தாமலிருக்கும் நிலைப்பாடு அரசாங்கத்துக்கு இல்லை. நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் தொடர்ந்தும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த எதிர்பார்த்திருக்கிறோம். இதனூடாக மக்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானம், அந்த வருமானம் எவ்வாறு செலவு செய்யப்படுகின்றது போன்ற விபரங்களை தெளிவுபடுத்த எதிர்பார்த்திருக்கிறோம்.

கடந்த காலங்களில் கடன் மற்றும் பணம் அச்சிட்டதனூடாகவே நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்திருந்தாலும், தற்போது கடன் பெறமுடியாத இக்கட்டான நிலைமையை சந்தித்திருக்கிறோம். தற்போதைய நிலைமையில் பணம் அச்சிட்டால் சர்வதேசத்துடன் பொதுவான இனக்கப்பாடொன்றுக்கு வரமுடியாது என்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெளிவுபடுத்தியே வருகிறோம்.

திறைசேரி, அரச நிறுவனங்கள் கோரும் நிதித் தொகையைக்கூட பெற்றுக்கொடுக்க முடியா நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. உதாரணமாக குறிப்பிடுவதானால் கடன் மீள் செலுத்தாமையின் காரணமாக போக்குவரத்து அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவந்த மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளுக்காக, சீனாவின் எக்ஸிம் வங்கியினால் வழங்கப்படவிருந்த கடன் கிடைக்காமையினால் அந்த வேலைத்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. 158 பில்லியன் ரூபா செலவில் கடவத்தையிலிருந்து மீரிகம வரையிலான 40 கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதியை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த வேலைத்திட்டமும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. தற்போது அந்தப் பணிகளை முன்னெடுப்பதானால் மதிப்பீட்டளவில் 265 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. நிதி இன்மையே இதற்கு பிரதான பிரச்சினையாகும். கடன் மறுசீரமைப்பு செய்தால் மாத்திரமே இந்த வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகும். இவ்வாறு பல்வேறு வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு தெளிவில்லை. இதற்கு முன்னர் பெற்ற கடன்தொகையை மீளச் செலுத்தாமையின் காரணமாகவே நாடு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். அதற்காகவே, பல்வேறு முயற்சிகளை அரசாங்கம் எடுத்துவருகிறது. இது அரசியல் பிரச்சினை இல்லை. இலங்கை அரசு ஏனைய அரசுகளுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் செயற்படாமையினால் நாட்டுக்கு ஏற்பட்ட பிரதிபலனாகவே நாடு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினையை தேசிய ரீதியாகவே சந்திக்க வேண்டும். அரசியல் ரீதியான தீர்வுகளை வழங்க முடியாது. ஆகவே, தேர்தலை நடத்தாமலிருப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பல்ல. நாட்டின் நிதி நிலைமை குறித்து திறைசேரியின் செயலாளர் நீதிமன்றத்துக்கும் விளக்கமளித்திருக்கிறார் என்றார்.

முதல் காலாண்டுக்குள்...

இந்த குறுகிய காலத்தில் இதனைசெய்யாத பட்சத்தில் ஏப்ரல் மாதமாகும்போது நாட்டை முன்னெடுத்துச்செல்ல முடியாதநிலை ஏற்படும் என்பதுடன் சர்வதேச மட்டத்தில் இலங்கை தனித்துவிடப்படும் என்று அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (14) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வரலாற்றில் முதல் தடவையாக பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்த முடியாது என்று சர்வதேசத்துக்கு அறிவித்திருக்கிறோம். அதனால், எமக்கு கடன் பெற்றுக்கொடுக்கும் நாடுகள், கடன் உதவி வழங்கும் வேலைத்திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன. அதனால், ஏதாவதொரு முறையில் இந்த வருடத்தின் ஏப்ரல் மாதத்துக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ளாவிட்டால் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது. தற்போது முறையாக செயற்படாவிட்டால் சர்வதேச மட்டத்தில் இலங்கை தனித்துவிடப்படும்.

எமக்கு கடன் வழங்கிய பிரதான கடன் வழங்குனர்களுடன் போதியளவு கடன் மறுசீரமைப்புச் செய்யாமல், தாம் கடன் வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் போவதில்லை என்றே சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருக்கிறது. அதனால், இந்த விடயம் தொடர்பில் அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் உள்ளிட்ட விசேட குழுவினரே கடன் மறுசீரமைப்புக்கான இராஜதந்திர கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

அதன் பிரகாரம் இந்தியா கடன் மறுசீரமைப்புக்கு தெளிவான இணக்கப்பாட்டை வழங்கியிருக்கிறது. பாரிஸ் கிளப்பும் இணக்கம் தெரிவித்திருக்கிறது. கடன், வரி பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை இரண்டு வருடங்களுக்கு இடைநிறுத்துவதற்கு சீனாவும் விருப்பம் தெரிவித்திருக்கிறது. இருந்தபோதும், சீனா இலங்கைக்கு வழங்கியிருக்கும் நிவாரணம் போதாது என்று நாணய நிதியம் அறிவித்திருக்கிறது. இதுவே தற்போது வரையிலுள்ள நிலைமையாகும்.

எதிர்காலத்தில், ஜனாதிபதி உள்ளிட்ட மத்திய வங்கி, நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள், பிரான்ஸின் லசாட் நிறுவனத்தின் அதிகாரிகள் ஆகியோர் ஏதாவதொரு முறையில் இந்த காலாண்டு நிறைவடைவதற்கு முன்னர் சாதகமான பதிலைப் பெற்றுக்கொள்வதற்கு பாரிய முயற்சிகளை எடுத்து வருகிறார்கள்.

இந்த முயற்சி சாதகமாகவே அமையவேண்டும். சாதகத் தன்மை இல்லாமல் போவதற்கு வாய்ப்பில்லை. ஒருவேளை சாதகமான பதில் கிடைக்காவிட்டால், என்னால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென்று யார் கூறினாலும், அவர்களிடம் இதற்கு அப்பால் மாற்றுத் தீர்வொன்று இருக்க வேண்டியது அவசியமாகும். மாற்றுத் திட்டங்கள் இல்லாத எவராலும், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களுக்கு அப்பால் இந்த நிலைமையை சாதகமாக்கிக் கொள்ள முடியாது என்றார்.

நெடுமாறனிடம்...

உளவுப் பிரிவினர் மீண்டும் திரட்டி வருகின்றனர். இதுகுறித்து நெடுமாறன் மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் விசாரணை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று பழ.நெடுமாறன் நேற்று முன்தினம் தெரிவித்தார். அவரது இந்தக் கருத்துக்கு இலங்கை இராணுவம் உடனடியாக மறுப்பு தெரிவித்தது.

இது ஒருபுறம் இருக்க, நெடுமாறனின் இந்த கருத்தை முழுமையாக புறந்தள்ளிவிட முடியாது என்பதால், பிரபாகரன் பற்றிய தகவல்களை மீண்டும் திரட்ட மத்திய உளவுப் பிரிவினர் உத்தரவிட்டுள்ளனர்.

பிரபாகரன் தொடர்பான தகவல்களை தமிழக க்யூ பிரிவு பொலிஸாரும் திரட்டத் தொடங்கியுள்ளனர். தமிழக பொலிஸ் துறையின் உளவுப் பிரிவு அத்தியட்சகர் டேவிட்சன் தேவாசீர்வாதம், அப்பிரிவு மேலாளர் செந்தில்வேலன், க்யூ பிரிவு எஸ்.பி. கண்ணம்மாள் தலைமையிலான பொலிஸார் மீண்டும் விசாரணையில் இறங்கியுள்ளனர்.

பிரபாகரன் மரணமடைந்ததாக ஏற்கனவே திரட்டப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் மீண்டும் கையிலெடுக்கப்பட்டு புலனாய்வு நடத்தப்பட்டு வருகிறது. பிரபாகரன் குறித்து வெளியிட்ட தகவல் தொடர்பாக நெடுமாறன் மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் விசாரணை நடத்தவும் உளவுப் பிரிவினர் முடிவு செய்துள்ளனர். நெடுமாறன் மற்றும் அவரது தொடர்புடையவர்களின் நடமாட்டம் கண்காணிப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பொரளை துப்பாக்கி...

இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

25 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன், தொடர்புடைய இரு இராணுவ வீரர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்யச் சென்றபோது தவறுதலாக இயங்கி வெடித்ததாகவே இராணுவத்தினர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்தல் ஒத்திவைப்பு...

செலுத்தப்படும் நிதியை பொறுத்தே அரச நிறுவனங்கள் தேர்தலுக்கான ஒத்துழைப்பை வழங்கி வந்தன.

வரலாற்றின் முதன் முறையாக இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான பொறுப்பு கூறவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

நாட்டின் ஜனநாயகம் ஒரு தனி மனிதரிடம், ஒரு அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழுள்ளதாலேயே இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமாயின் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நிதி தொடர்பில் சுயாதீனமாக இயங்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும்.

அவ்வாறான ஒரு நிலையை ஏற்படுத்தும்போதே சுதந்திரமானதொரு தேர்தலை நடத்த முடியும்.

இந்தப் பிரச்சினை உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமானதல்ல. இந்த நிலையிலும் தேர்தல் நடைபெறலாம். நமக்கு தெரியும் இந்த தேர்தலால் மக்களின் வாழ்வாதாரம் உயரப்போவதில்லை.

எனினும் இந்நிலைக்கு நாம் இடம்கொடுத்தால் அரசியல்வாதிகளுக்கு பாராளுமன்றம், ஜனாதிபதித் தேர்தலைக்கூட ஒத்திவைக்க முடியும். எதிர்காலத்தில் எந்தவொரு ஆட்சியாளரும் பொருளாதார நிலைமையை காரணங்காட்டி எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்கக்கூடிய நிலை ஏற்படும் அபாயமுள்ளது'' என அவர் தெரிவித்தார்.

மின்சார சபை...

பாராளுமன்றத்தில் தேசிய பேரவைக்கு அறிவித்தனர். மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இரண்டு தரப்பினரும் கூடிக் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்குமாறு நேற்று முன்தினம் (13) முற்பகல் கூடிய தேசிய பேரவை அறிவித்திருந்தது. அதற்கமைய, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும், இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க முடியாமல் போனதாகவும் அதிகாரிகள் இதன்போது தேசிய பேரவைக்கு அறிவித்தனர்.

இன்று ஆணைக்குழு கூடி இறுதித் தீர்மானம் எடுக்க எதிர்பார்ப்பதாக இதன்போது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

தேசிய பேரவை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் நேற்று (14) கூடிய போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிடுகையில், மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை 15ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாக இதற்கு முன்னர் தேசிய பேரவை கூடியபோது பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பேரவைக்கு அறிவித்ததாகவும், அதனால் இன்று (15) இது தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்படும் என தான் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர, டிரான் அலஸ், இராஜாங்க அமைச்சர்களான டி.வி. சானக, இந்திக்க அனுருத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதேபோன்று, பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீரவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

உள்ளூராட்சித்...

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கும் இடையே தேர்தல் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின்போது ஆணைக்குழுவினால் இந்த விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

அங்கு இடம்பெற்ற கருத்தாடல்களின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஆணைக்குழுவுக்கு உருவாகியுள்ளதாக அறிய முடிந்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப் படலாம் என்பதற்கான அறிகுறியாக, திட்டமிட்டபடி இன்று (15) முதல் தபால் மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்க முடியாது என்பதால் தபால் மூல வாக்களிப்பை காலவரையின்றி ஒத்திவைப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா அறிவித்துள்ளார்.

ஆணைக்குழு தொடர்பிலான வழக்குகளுக்கு சட்டமா அதிபர் ஆஜராகுவதில்லையென அவர் தெரிவித்துள்ளதுடன் நிதி அமைச்சின் செயலாளரை அழைத்து கலந்துரையாடுவதற்கான அதிகாரம் தனக்கு இல்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர், தமக்கு தேவையான பணம் கிடைக்கவில்லையென்றும், 10 கோடி ரூபா பணமே கிடைத்ததாகவும், பணம் முழுவதுமாக கிடைத்த பின்னரே வாக்குச்சீட்டு அச்சிடும் பணியை ஆரம்பிக்கும்படி தனக்கு கூறப்பட்டுள்ளதாக அரச அச்சகம் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தப்படுமா? இல்லையா? என்பதை உறுதியாக அறிவிக்குமாறு கட்சிகளின் பிரதிநிதிகள் கேட்டபோது, அது பற்றி தன்னால் உத்தரவாதம் வழங்க முடியாதெனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், நாளையே பணம் வழங்கப்பட்டால், தேர்தல் பணிகளை ஆரம்பிப்போம் என்று கூறியுள்ளார்.

பணம் தட்டுப்பாடெனில், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் உள்ளிட்ட தரப்பினரிடம் பணம் சேகரித்து, தேர்தலை நடத்தலாமென கட்சிகளின் பிரதிநிதிகள் சிலர் யோசனை கூறியுள்ளார்கள். அவ்வாறு பணம் சேகரித்து தேர்தல் நடத்தும் அதிகாரம் தமக்கு கிடையாதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின், ஒவ்வொரு மாவட்டமாக தேர்தலை நடத்துமாறு கட்சிகள் யோசனை தெரிவித்தன. அது குறித்து சட்ட வல்லுனர்களுடன் ஆலோசித்து கருத்து தெரிவிப்பதாக ஆணைக்குழு தலைவர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்,

உயர்நீதிமன்றத்துக்கு கொடுத்த உத்தரவாதத்தில் இருந்து பின்வாங்க வேண்டாம் என்று நாங்கள் அவரிடம் கூறினோம் என்றார். "சட்டமா அதிபரிடமிருந்து தனக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்று ஆணைக்குழுவின் தலைவர் எங்களிடம் கூறியதுடன், இந்த விவகாரத்தை மீண்டும் ஒருமுறை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்புவேன் என்றும் குறிப்பிட்டார்," என மத்தும பண்டார மேலும் கூறினார். இதேவேளை, திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்பட மாட்டாது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும், தேர்தலுக்கு நிதி வழங்க முடியாதென அரசாங்கம் கூறுவது அரசியலமைப்புக்கு முரணானது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

காரைநகர் - ஊர்காவற்றுறை கடற்பாதையை காரைநகர் பிரதேச சபையிடம் தாருங்கள்

சபையின் தவிசாளர் பாலச்சந்திரன் கோரிக்கை

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான கடற்பாதை சேவை மட்டுப்படுத்தப்பட்டதால் அப்பாதையை பயன்படுத்தும் பல தரப்பினரும் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர். அந்தப் பாதையை காரைநகர் பிரதேச சபையிடம் தந்தால் அதனை திறம்படச் செய்வோம் - என காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபையில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

காரைநகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கு பயணிக்கும் உத்தியோகத்தர்களாக இருந்தாலும், பொதுமக்களாக இருந்தாலும் பெரும் நெருக்கடியை சந்திக்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இயக்கப்படுகின்ற குறித்த கடற்பாதை கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தால் இயங்காத நிலையில் காணப்பட்டதுடன், அதற்கான மண்ணெண்ணெய நாங்கள் பெற்றுக்கொடுத்து பாதையை இயங்கச் செய்தோம்.

தற்போது மண்ணெண்ணெய் செலவிற்கு தேவையான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் பாதை சேவையின் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டு, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான சேவை நடைபெறுகிறது. கடமைக்குச் செல்லும் ஊழியர்களாக இருந்தாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும் சரி தனியார் படகுக்கு ஒரு வழிப் பயணத்திற்கு நூறு ரூபா கொடுத்து தமது வாகனங்களுடன் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்கின்றனர்.

இவ்வாறு அவர்கள் ஒரு மாதத்தில் 20 நாட்களுக்கு கடமைக்கு செல்வார்களானால் அவர்களது சம்பளத்திலிருந்து இருவழி பயணத்திற்கு 200 ரூபா செலவிடப்படுகிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அவர்கள் சம்பள உயர்வும் இல்லாமல் அவஸ்தைப்படும் நிலையில், தமது குடும்பச் சுமையை எவ்வாறு சமப்பார்கள் என சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பாதையை இயக்குவதற்கு நாங்கள் 04.10.2022 அன்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் 58ஆவது இலக்க தீர்மானம் மூலம் எமது சபையிடம் அந்த பாதையை ஒப்படைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கியிருந்தோம். ஆனால், அவர்கள் எமக்கு இதுவரை எந்தவிதமான பதிலும் வழங்கவில்லை.

இந்தப் பாதையை எம்மிடம் வழங்கினால் சிறப்பான சேவையை எம்மால் வழங்கமுடியும். அதுமட்டுமன்றி நிதிப் பிரச்சினை ஏற்படும்போது புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற உறவுகளிடமும் எமது பகுதிகளில் வாழ்கின்ற செல்வந்தர்களிடமும் நிதியைப் பெற்று சிறப்புடன் சேவையை வழங்க முடியும் - என்றார்.

சிறுத்தை இறைச்சியுடன் நால்வர் கைது

பொகவந்தலாவை, கொட்டியாகல பகுதியில் சிறுத்தை ஒன்றைக் கொன்று, அதன் இறைச்சியை விற்பனைசெய்த 04 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (13) மாலை கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டியாகல காட்டுப்பகுதியில் தேயிலை மலையை அண்டிய பகுதியில் கம்பிக்கூடு வைத்து சிறுத்தை வேட்டையாடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொகவந்தலாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொடுப்பனவு மற்றும் கட்டணங்களை செலுத்த அனைத்து அரச நிறுவனங்களிலும் டிஜிட்டல் தொழில்நுட்பப் பயன்பாடு

எதிர்வரும் செப்டெம்பருக்குள் திட்டம் நடைமுறைக்கு

அனைத்து அரச நிறுவனங்களிலும் கொடுப்பனவு மற்றும் கட்டணங்களுக்கு மின்னணு முறையில் பணம் செலுத்தும் வசதியை கட்டாயமாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அமைச்சு அதிகாரிகளுக்கு தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் பணிப்புரை விடுத்தார்.

தொழில்நுட்ப அமைச்சின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே இராஜாங்க அமைச்சர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

பொதுமக்கள் அரச நிறுவனங்களுக்குச் சென்று டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் இலத்திரனியல் பணம் செலுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள் பல அரச நிறுவனங்களில் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் பணப்பரிவர்த்தனைகளுக்கான பற்றுச்சீட்டுகளை கையால் எழுதுவது தொடர்கிறது. இது முறைசாரா மற்றும் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளும் செயல்முறையாகும். அதன்படி, அரச நிறுவனங்களில் மின்னணு முறையில் பணம் செலுத்தும் வசதிகளை மேம்படுத்துவது கட்டாய தேவையாக நோக்கப்படுகிறது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டத்தை தொழில்நுட்ப அமைச்சின்கீழ் நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. அதன்படி எதிர்காலத்தில் அரச நிறுவனங்களில் அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் கட்டணங்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்ப வசதியை வழங்குவது கட்டாயமாகும்.

எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தொழில்நுட்ப அமைச்சின் பணிப்பாளர் அபிவிருத்தி ஜனக்க சம்பத் கீகியானகே தெரிவித்தார்.

நிதியமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு உள்ளிட்ட பிரதான அரச நிறுவனங்களின் தலைவர்களைக்கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனக்க கம்பத் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன், தேவையான திட்டங்களை தயாரித்து முடிவுகளை எடுக்க வேண்டும். இந்தத் திட்டம் குறித்து மக்களுக்குத் தெளிவிக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் நிறுவனங்களிலும் குறைந்த எண்ணிக்கையிலான அரச நிறுவனங்களிலும் மின்னணுக் கட்டண முறை ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளது. வாகன வருமான உரிமம், பிறப்பு, திருமணம், இறப்பு சான்றிதழ்கள் போன்ற சேவைகளைப் பெறுவதற்காக வீட்டிலிருந்தே மின்னணு முறையில் பணம் செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சேவையை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம் இலத்திரனியல் ஊடாக மாத்திரம் குறித்த அரச நிறுவனங்களுக்குப் பணம் செலுத்தும் வகையில் பிரஜைகளை பழக்கப்படுத்தவும் ஊக்குவிக்கவும் முடியுமென இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் சுட்டிக்காட்டினார்.

இதன் மூலமாக வீட்டிலிருந்தே சேவைகளைப் பெறமுடியும், எனவே, தேவையற்ற நேரத்தை செலவிடுவதில்லை. மேலும் நிதி முறைகேடுகள் மற்றும் ஊழலை குறைக்க முடியும். டிஜிட்டல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் பொதுத்துறையின் அனைத்து கொடுக்கல், வாங்கல்களையும் இலத்திரனியல் கொடுப்பனவுகளாக அமுல்படுத்துவது தொழில்நுட்ப அமைச்சின் இலட்சியம் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் இந்த வேலைத்திட்தை உத்தியோகபூர்வமாக அமைத்து அரச நிறுவனங்களுக்கும் வெளியிடுவதற்கும், 2024 மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் அனைத்து அரச நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் பேராசிரியர் நிரஞ்சன் குணவர்தன தெரிவித்தார்.

மனித - யானை மோதலைத் தடுப்பதற்காக யானை வழித்தடங்களை அமைக்கத் திட்டம்

மனித - யானை மோதலை தீர்க்கும் முயற்சியாக பல புதிய யானை வழித்தடங்களை உருவாக்க வனவிலங்கு மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

மனித - யானை மோதலை தீர்க்க பயன்படுத்தப்படும் வனப்பகுதிகளில் சில பகுதிகளை அகற்றி, யானை வழித்தடங்கள் அமைக்கப்படும் என்று வனவிலங்கு மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருத்தமான பிரதேசங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வனவிலங்கு மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.சி.எம்.ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் வசிக்கும் பகுதிகளிலிருந்து வெகு தொலைவிலுள்ள பகுதிகளில் புதிய யானை வழித்தடங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மஹா ஓயா ஆற்றில் பாய்ந்த மாணவனின் சடலம் 3 நாட்களுக்குப் பின்னர் நேற்று மீட்பு

தோப்புவ பாலத்திலிருந்து மஹா ஓயாவுக்குள் குதித்த 17 வயதுடைய மாணவனின் சடலம் நேற்று (14) பிற்பகல் 2 மணியளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆற்றில் குதித்த மாணவனின் சடலத்தை மூன்று நாட்களுக்குப் பிறகு ஆற்றின் அடிப்பகுதியிலிருந்து பிரதேசவாசிகள் கண்டெடுத்தனர்.

யைலக்கத் தொலைபேசிக்காக மாதாந்தம் செலுத்தவேண்டிய 10,000 ரூபா பணத்துடன் மாணவன் வீட்டைவிட்டு வெளியேறியதாக அவரது தாய் கூறியதாக கொச்சிக்கடை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வீட்டைவிட்டு வெளியேறிய அவர், தோப்புவ பாலத்திலிருந்து மஹாஓயா ஆற்றுக்குள் குதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாலத்திலிருந்து மாணவன் குதித்தை அருகில் இருந்த ஒருவர் பார்த்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார்.

தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் மாசி மாதம் 03ஆம் நாள் புதன்கிழமை

மேஷம் புதிய தொழில் வியாபாரங்களை ஆரம்பித்தால் சிக்கல் உண்டு, செலவு செய்யும்போது சிந்தித்துச் செய்யுங்கள்.

ரிஷபம் வாகனங்களால் அதிக சுகமும் லாபமும் உண்டு, புகழ் செல்வாக்கு சிறப்பாக அமையும்.

மிதுனம் எதிரிகள் உங்களிடம் பணிந்து நடந்துகொள்வார்கள், தற்காலிக தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம்.

கடகம் சரியான முடிவுகளை எடுக்க முடியாது திண்டாடுவீர்கள், அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்காதீர்கள்.

சிம்மம் வாகனங்களில் தூர பயணங்களை ஒத்திவைப்பது நல்லது. அனைத்தும் மந்தகதியில் இயங்கும்.

கன்னி முயற்சிகள் அனைத்தும் பலிக்கும் நாள், நினைத்த காரியத்தை முடித்தே தீர்வீர்கள்.

துலாம் உங்கள் மதிப்பையும் கௌரவத்தையும் நீங்களே கெடுத்துக்கொள்வீர்கள், வீண் பேச்சு வேண்டாம்.

விருச்சிகம் நீங்கள் விரும்பிய உணவு, படுக்கை அமையும், முகமலர்ச்சியுடன் சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள்.

தனுசு ஆணவத்தால் அவமானமடைய வேண்டி வரும், பணத்தின் பெருமையை அறியும் நாள்.

மகரம் புதிய நண்பர்கள் தொடர்பால் புதிய உறவை ஏற்படுத்திக்கொள்வீர்கள், தேவைக்கேற்ப பணம் கிடைக்கும்.

கும்பம் உங்கள் கீழ் உள்ளவர்களை நம்பி எதையும் செய்யலாம், குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும்.

மீனம் தந்தையின் சொத்துகளை பாதுகாத்துக்கொள்ளுங்கள், தர்ம சிந்தனையுடன் செயலாற்றுங்கள்.

திதி	: நவமி மு.ப. 7.39 வரை பின் தசமி
நட்சத்திரம்	: கேட்டை பி.இ. 12.46 வரை பின் மூலம்
யோகம்	: சித்த யோகம் (சுப காரியம் நன்மை)
வார சூலை	: தென்மேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது
நல்ல நேரம்	: மு.ப. 9.31 – 10.31 மணி வரை
ராகு காலம்	: 12.31 – 2.01 மணி வரை
எமகண்டம்	: 8.01 – 9.31 மணி வரை
குளிகை	:11.01 – 12.31 மணி வரை
சந்திராஷ்டமம்	: மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
தள அதிர்ஷ்டம்:	பூசம், அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு)

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

ஷாப்டரின் உடற்கூறுகளைப் பாதுகாக்க நீதிமன்றம் உத்தரவு

மர்மமான முறையில் மரணமடைந்த தினேஷ் ஷாப்டரின் உடற்பாகங்களை விசாரணை நோக்கங்களுக்காக பாதுகாப்பாக வைக்குமாறு கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி மற்றும் அரசாங்க மரண விசாரணை அதிகாரிக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று (14) உத்தரவிடப்பட்டுள்ளது.

உயிரிழந்த தினேஷ் ஷாப்டரின் குடும்பத்தினருக்காக வாதிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன விடுத்த கோரிக்கைக்கமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறுநீரக மோசடி குற்றச்சாட்டில் கைதான நால்வருக்குப் பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு

ராஜகிரியவிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று சிகிச்சை மோசடியில் ஈடுபட்ட சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள நான்கு சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய முன்னிலையில் சந்தேகநபர்கள் நேற்று (14) ஆஜர்படுத்தப்பட்டபோது பிணை மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சந்தேகநபர்களை எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இந்த வழக்கில் தொடர்புடைய மேலும் மூன்று சந்தேகநபர்களை கடுமையான நிபந்தனைகளின் கீழ் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கஞ்சா கலந்த சொக்லேட்களை தயாரித்த நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை

கஞ்சா கலந்த சொக்லேட்களை தயாரித்து வெளியிட்ட நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென ஆயுர்வேத திணைக்களத்தின் வைத்தியர் பி.தாரக்க நேற்று (14) தெரிவித்தார். ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கஞ்சா கலந்த சொக்லேட்டுகள் காதலர் தின சந்தைக்காக உருவாக்கப்பட்டன, அதுபற்றி பல சமூக ஊடக விளம்பரங்களும் வெளியாகியுள்ளது.

ஆயுர்வேத திணைக்களத்தின் பெயரைத் தவறாக பயன்படுத்தி சொக்லேட் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், காதலர் தினத்தைக் கொண்டாடும் இளைஞர்களை குறிவைத்து பல விளம்பரங்களையும் வெளியிட்டுள்ளது.

குறித்த சமூக ஊடகங்கள் ஆயுர்வேதப் பெயரைப் பயன்படுத்தி ஆயுர்வேதமற்ற மருந்தை விளம்பரப்படுத்துவது சட்டவிரோதமானது என்பதுடன், தண்டனைக்குரியது. "நாட்டின் தலைவர்களும் உயர் அதிகாரிகளும் கஞ்சாவை மருத்துவ பயன்பாட்டிற்காக பயன்படுத்த சட்டங்களையும் விதிமுறைகளையும் உருவாக்கும் நேரத்தில், கஞ்சாவின் மருத்துவ குணங்களை மக்கள் பெறுவதற்கான வாய்ப்பைத் தடுத்து அமைதிய பேரழிவாக மாற்ற இதுபோன்ற பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.

குறிப்பாக, ஆயுர்வேதத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்கும் கஞ்ச அடங்கிய உணவுப்பொருளை உற்பத்திசெய்வதற்கும் விளம்பரப்படுத்துவதற்கும் முன் உரிய அதிகாரிகளின் அனுமதியைப் பெறவேண்டும்.

புதிதாக தயாரிக்கப்படும் மருந்து அல்லது உணவு ஆயுர்வேத திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டாலும் அதை 'சூத்ரா குழு'வுக்கு சமர்ப்பித்து விளம்பரத்திற்கு மற்றொரு அனுமதி பெறவேண்டும். ஆயுர்வேதத்திற்கும் சொக்லேட்டுகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சொக்லேட்டை மருந்தாகப் பயன்படுத்துவதுமில்லை. எனவே, இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்று டாக்டர் தாரக்க கூறினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்கு முன்பாக இஸ்ரேலுக்கு ஆதரவாக கவனமீர்ப்புப் போராட்டம் நேற்று (14) முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விநோபா மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1980
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, பெப்ரவரி 15ஆம் திகதி, புதன்கிழமை

நியாயப்பாடில்லாத அரசாங்கத்தை ஜனாதிபதி தொடர விரும்புகிறார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் காரணிகள்

உயர் நீதிமன்றம் அதன் முன்னால் விசாரணைக்கு வந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான வழக்குகளில் மன்னன் சாலமனுக்கு இருந்த விவேகத்துடன் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இந்த தேர்தல்களை தடுப்பதற்கு அரசாங்கம் உச்சப்பட்சத்துக்கு முயற்சிக்கின்றது என்று கவலைகொண்ட எதிர்ணி கட்சிகளினால் முதல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. தேர்தல்களை இரத்து செய்யுமாறு அல்லது ஒத்திவைக்குமாறு அரசாங்கத்திடமிருந்து தேர்தல் ஆணைக்குழு கடுமையான நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கிறது. அரசாங்கம் மேற்கொள்கின்ற பல்வேறு முயற்சிகளை எதிரணி தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விளக்கிக் கூறியிருக்கிறார். தேர்தல்களை நடத்துவதற்கு போதுமான நிதி இல்லை என்ற அரசாங்கத்தின் ஏற்றுக்கொள்ளமுடியாத அறிவிப்பும் அந்த முயற்சிகளில் ஒன்று.

ஆனால், தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் தேர்தல் ஆணைக்குழு தேர்தல் தினமாக கொள்ள 9ஆம் திகதியை அறிவித்து தொடர்ந்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. தேர்தல்களை நடத்துவதாக ஆணைக்குழு உறுதியளித்திருப்பதால் மேற்கொண்டு தலையிடவேண்டிய தேவையில்லை என்று உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்பில் கூறியது.

இரண்டாவது வழக்கை தற்போதைய தருணத்தில் தேர்தல்களை நடத்தக்கூடியதாக நாட்டின் பொருளாதார நிலைவரம் இல்லை என்று முறையிட்டு மனுதாரர் ஒருவர் தாக்கல் செய்தார். சட்டப் பிரகாரமான நடைமுறைகளை மனுதாரர் பின்பற்றவில்லை என்ற ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் வழக்கு விசாரணையை பெப்ரவரி 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. அந்த திகதிவரையில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுவிடும். அரசாங்க ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான தினம் அதற்கு முதல் நாளாகும்.

தேர்தல் ஆணைக்குழு உட்பட இரண்டாவது மனுவை எதிர்க்கும் தரப்புகள் தேர்தல் செயன்முறைகள் திரும்பிவர முடியாத ஒரு கட்டத்தை அடைந்துவிட்டன என்று உறுதியாக வாதிடக்கூடியதாக இருக்கும். பொருளாதார நெருக்கடி நீண்டகாலத்துக்கு தொடரக்கூடிய சாத்தியம் இருக்கிறது என்பதும், அரசாங்கத்திடம் நிதியில்லை என்று நியாயம் கற்பித்து சகல தேர்தல்களும் ஒத்திவைக்கப்படக்கூடும் என்பதுமே இந்த வழக்கில் உட்கிடையாக இருக்கக்கூடிய ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தலாகும்.

தேர்தல் செயன்முறைகள் சமூக மட்டத்தில் இப்போது முழுவீச்சில் முன்னெடுக்கப்படுகின்றன. குழப்பங்கள் இல்லாமல் நாடுபூராவும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இதற்காக அரசாங்கத்தைப் பாராட்டவேண்டும். மறுபுறத்தில், பொருளாதார இடர்பாடுகளுக்கும் வரி அதிகரிப்புகளுக்கும் எதிராக கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய நகரங்களில் சிவில் சமூக குழுக்களினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களை பொலிஸார் தடுத்துவருகின்றனர். யாருக்கு வாக்களிப்பது என்று வாக்காளர்கள் தீர்மானிக்கக்கூடியதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு முன்னரான காலப்பகுதியில் உகந்த சூழ்நிலை உருவாக்கப்படவேண்டியது அவசியமாகும். அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குறித்த தங்களது அக்கறைகளை மக்கள் வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பை இது வழங்கும்.

கடுமையான குற்றச்சாட்டு

தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு பல்வேறு வழிமுறைகளை அரசாங்கம் முயற்சித்துப் பார்த்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் எதிர்மறையான மனநிலையின் முன்கூட்டிய எச்சரிக்கை அறிகுறியாக தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவர்களிடம் கேள்விகளை எழுப்பிய ஜனாதிபதியின் செயல் அமைந்தது. தேர்தல்களுக்கான திகதிய தீர்மானிப்பதற்கு முன்னதாக கல்வியமைச்சு அதிகாரிகளுடன் தேர்தல் ஆணைக்குழு கலந்து ஆய்வுசெய்ததா என்பதும் அந்த கேள்விகளில் ஒன்று. இது ஆணைக்குழுவின் சுதந்திரத்தில் வேண்டாத ஒரு தலையீடு என்று கண்டனங்கள் கிளம்பின. ஜனாதிபதி பதவியேற்பதற்கு முன்னதாக போராட்ட இயக்கத்துக்கு முகங்கொடுக்க முடியாமல் மக்களிடம் இருந்து தப்பியோடிக்கொண்டிருந்த தனது அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களின் நலன்களை அவர் பாதுகாக்கின்றார் என்ற கடுமையான குற்றச்சாட்டு இருக்கிறது. இந்த குற்றச்சாட்டை சமாளிக்க வேண்டியவராக அவர் இருக்கிறார்.

போராட்ட இயக்கத்தை அடக்கி ஒடுக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்த முறை குறித்து மக்கள் மத்தியில் கடுமையான வெறுப்புணர்ச்சி தொடருகிறது. இந்த காரணத்துக் காகத்தான் பெருமளவு வளங்களும் நிதியும் செலவாகும் என்ற போதிலும் கூட தேர்தல்கள் முக்கியமானவையாகின்றன. அரசாங்கமும் கொள்கை வகுப்பாளர்களும் மக்களின் ஆணைபையும், நியாயப்பாட்டையும் கொண்டவர்களாக இருப்பதை விடவும் வேறு எதுவும் ஜனநாயக சமுதாயம் ஒன்றுக்கு முக்கியமானதாக இருக்கமுடியாது.

ஊழல் தனமானவர்கள் என்று நம்பப்படும் அரசாங்க தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாட்டை பொருட்படுத்தாதவர்களாக தொடர்ந்தும் நடந்துகொள்வது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதியும் அவரது ஆலோசகர்களும் இவையெல்லாவற்றையும் மறுத்துக்கொண்டு இருக்கலோ அல்லது மீண்டும் பழைய நிலைவரமே ஏற்படுத்தப்பட்டருப்பது தொடர்பில் மக்களின் கோபத்தையோ கருத்தில் எடுக்காமல் இருக்கலோ முடியாது.

வழமையான கேள்விப்பத்திர நடைமுறைக்கு வெளியே மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு தற்போது மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் இதற்கு ஓர் உதாரணமாகும். இது தொடர்பில் இலங்கை மருத்துவர்கள் கல்லூரி, இலங்கை சத்திர சிகிச்சை நிபுணர்கள் கல்லூரி, இலங்கை மகப்பேற்று மற்றும் குழந்தை மருத்துவர்கள் கல்லூரி ஆகியவற்றின் கவுன்சில் என்பன ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றன.

வழமையாக மருந்து ஒன்றை இறக்குமதி செய்வதற்கு முன்னதாக தேசிய மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அதை மதிப்பீடு செய்து பதிவுசெய்யவேண்டும் என்று அந்த அதிகாரசபை வெளியிட்ட ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஆனால், இறுதியாக நடைபெற்ற அதிகாரசபையின் மருந்துப்பொருட்கள் மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத்தில் இந்திய தொடர் கடனுதவியின் மூலமாக கொள்வனவு செய்யப்படவிருக்கும் பெருந்தொகையான சுமார் 330 மருந்துப்பொருட்களின் பட்டியல் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றில் எதுவுமே அதிகாரசபையினால் மதிப்பீடு செய்யப்படவோ அல்லது பதிவுசெய்யப்படவோ இல்லை.

பாதீடாக ஏற்படுத்தும் காரணிகள்

துரதிர்ஷ்டவசமானதும் கவலைக்குரியதுமான இந்நிகழ்வுப்போக்குகள் கடன் மீளச் செலுத்துதலில் நிலவுபேறான தன்மையை ஏற்படுத்துதல் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை வென்றெடுப்பது மற்றும் இன, மத சிறுபான்மை சமூகத்தவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பது உட்பட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடைப்பிடிக்கின்ற மிகவும் நேர்மறையான நிலைப்பாடுகளை மலினப்படுத்துகின்றன.

இன, மத சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு காணப்படவேண்டிய அரசியல் தீர்வு நிலைபேறான ஒரு யதார்த்தமாக வேண்டும் என்ற ஜனாதிபதியின் கூற்று இவற்றில் மிகவும் முக்கியமானதாகும். அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பில் புரிந்துணர்வுடனும் ஒருவகை துணிச்சலுடனும் இரு பொருட்படுதலுக்கு அப்பாற்பட்ட முறையில் அவர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார். தற்போதைய அரசியல் தலைவர்களில் எவரும் அத்தகைய துணிச்சலை வெளிப்படுத்த தயாராக இருந்ததில்லை.

ஜனாதிபதியாக ஒரு குறுகிய காலத்துக்குள் ரணில் விக்கிரமசிங்க வட பகுதிக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்திருக்கிறார். போரினால் நிர்மூலமான அந்த பகுதியின் சிவில் சமூகத்துக்கும் அரசியல் தலைவர்களுக்கும் நேசக்கரத்தை நீட்டுகிறார். வடபகுதி நாட்டின் ஏனைய பகுதிகளினதும் கண்டி, காலி, மாத்தறை போன்ற ஏனைய நகரங்களினதும் வளர்ச்சியை எட்டிப்பிடிப்பதற்கு கணிசமான முதலீடுகளை வேண்டி நிற்கிறது.

மிகவும் அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின்போது அவர் வடபகுதியின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான தனது நோக்கை வெளிப்படுத்தியதுடன், நீண்டகாலமாக இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டிருந்த நிலங்களின் ஒரு பகுதி அதன் உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்படுவதையும் உறுதிசெய்தார். சுதந்திரதின கொண்டாட்டத்தின்போது தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்படுவதை ஜனாதிபதி உறுதிசெய்தார். சந்தேகத்துக்கிடமின்றி அது சிறிய தொரு நல்லெண்ண சமிக்ஞை என்றாலும், நாட்டின் நான்கு பிராதான இனத்துவ சமூகங்களில் மூன்று சமூகங்களினால் முதல் மொழியாக பேசப்படுகின்ற தமிழ்மொழிக்கு சமத்துவ அங்கீகாரம் வழங்கவேண்டிய அவசியத்தை உருவகப்படுத்தி நிற்கிறது.

ஆனால், ஜனாதிபதியின் இந்த நேர்மறையான உணர்வுகளும் நடவடிக்கைகளும் அவர் தனது பக்கத்தில் இருப்பதாக நம்புகின்றவர்களின் அதிகார அரசியல் தேவைப்பாடுகளினாலும் நிர்ப்பந்தங்களினாலும் மலினப்படுத்தப் படுகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான பிரச்சினையும், அதை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு முயற்சிகளும் மக்களின் கண்களில் தாமீக நியாயப்பாடு இல்லாததாக தோன்றுகின்ற அரசாங்கம் ஒன்றைத் தொடர்ந்து நடத்த ஜனாதிபதி விரும்புகிறார் என்ற ஓர் எண்ணத்தை உருவாக்கியிருக்கிறது.

ஊழல்தனமானவர்கள் என்று பரவலாக நம்பப்பட்ட அரசாங்கத் தலைவர்கள் மீண்டும் பதவிகளில் அமர்த்தப்பட்டு பாதுகாக்கப்படுவதும், மக்கள் போராட்ட இயக்கத்தின் இளைய தலைவர்களும் முதிய தலைவர்களும் கொழும்பைப்பிடித்துப்படுவதும் ஜனாதிபதியின் உன்னதமான பொருளாதார சீர்திருத்த முயற்சிகளையும் இன, மத சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளையும் ஆதரிக்க விரும்புகின்றவர்களில் இருந்து கூட அவரை தூரவிலக்குகிறது.

கலாநிதி ஜெகான் பெரேரா

நக்கல் நமசிவாயம்

எனக்கென்னவோ அரசாங்கத்தின் மிழுசிக்கிற்கு ஏற்ற மாதிரி தேர்தல் ஆணைக் குழு டான்ஸ் ஆடுது போலப் படுகுது..!

இன்றைய நாளில்..

* 1493 – கிறிஸ்டோபர் கொலம்பஸ், 'நீனா' என்ற கப்பலில் பயணம் செய்யும்போது, புதிய உலகத்தில் தாம் கண்ட அதிசயங்களை விபரித்து வடிதங்களை எழுதினார்.
* 1796 – டச்சுக்களின் வசம் இருந்த கொழும்பு நகரை பிரித்தானியர் கைப்பற்றினர்.
* 1920 – யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.
* 2001 – முழுமையான மனித மரபணுத்தொகை 'நேச்சர்' இதழில் வெளியானது.

தெற்காசியாவின் முதல் விமான உதிரிப்பாகங்களை அகற்றும் முனையம் மத்தல விமான நிலையத்தில்

தெற்காசியாவின் முதல் விமான உதிரிப் பாகங்களை அகற்றும் தளம், மத்தல சர்வதேச விமான நிலையத்தில் விரைவில் நிறுவப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவுக்கான அனுமதி கிடைத்தவுடன் இந்தத் திட்டம் விரைவில் முடிக்கப் படுமென்று எதிர்பார்க்கப்படுவதாக மத்தல விமான நிலையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த செயல்முறையில் எந்த பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தாமல் விமானங்களின் உதிரிப்பாகங்களை அகற்றும் வல்லுனர்களால் விமானம் குறித்த முதல் அறிக்கை வெளியிட்ட பின்னர், விமான உதிரிப்பாகங்களை அகற்று வதற்கு உள்நாட்டு தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு பயிற்றுவிக்கப்படும்.

அந்தந்த விமான நிறுவனங்களின் பொறியியலாளர்களால் பிரித்தகற்றப்பட்ட பின்னர் உதிரிப் பாகங்களை அகற்றும் செயல்முறை தொடங்கும். விமானங்களின் உதிரிப் பாகங்களை அகற்றும் பணிக்காக பாவனைக்கு உதவாத விமானங்களே பயன்படுத்தப்படும்.

அதன்படி, விமான உதிரிப்பாகங்களை அகற்றும் திட்டத்தைத் தொடங்கும் முதல் விமான நிலையமாக மத்தல விமான நிலையம் போயிங் தரவரிசையில் இடம்பிடிக்கும். இந்த திட்டம் குறித்தான விவரங்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், நாட்டுக்கு பெரும் வருமானம் கிடைக்கப் பெறுவதுடன், அதிக வேலைவாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் திட்டம் மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் (CEA), இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் (CAASL) மற்றும் நுகர்வோர் விவகார ஆணையம் (CAA) ஆகியவற்றின் அனுமதிக்காகவே காத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

விவசாய அமைச்சு உர நிறுவனங்களுக்கு 17 ஆயிரம் மில்லியன் ரூபா கடன் நிலுவை

உடனடியாக செலுத்துமாறு கோரிக்கை

அரசாங்கம் செலுத்தவேண்டிய 17,000 மில்லியன் ரூபா கடன் தொகையை உடனடியாக செலுத்துமாறு உர நிறுவனங்கள் விவசாய அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சில வருடங்களாக இராசாயன பசளைகள் மற்றும் சேதன பசளைகளை உரநிறுவனங்களிடம் கொள்வனவு செய்வதற்கு பெறப்பட்ட இந்தக் கடன்களை உர நிறுவனங்களுக்கு செலுத்தவேண்டியுள்ளதாக உர நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி இரசாயன உரங்களை வழங்கியதற் காக 11,000 மில்லியன் ரூபாவும், சேதன உரங்களை வழங்குவதற்காக 6,000 மில்லியன் ரூபாவும் அந்தந்த நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 4,000 மில்லியன் ரூபா நிலுவைத் தொகை செலுத்தப்பட்டபோதிலும், மேலும் 17,000 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளதாக அந்தந்த உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் உர நிறுவனங் களுக்கு அறிவித்துள்ளனர்.

சிறுபோகத்துக்கான உரங்களை வழங்குவது தொடர்பான கலந்துரையாடலில், அரசாங்கம் நிதி ஒதுக்கீடுகளை வழங்கும் முறைக்கேற்ப உரிய நிலுவைத்தொகை செலுத்தப்படுமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்தப் பருவத்தில் நாடுபூராகவும் உரங்களை விநியோகிக்க அரசாங்கம் 6 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடவுச்சீட்டு விநியோகம் திடீர் இடைநிறுத்தம்: வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் அசௌகரியம்

திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்புமென குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம் அறிவிப்பு

கணினி கட்டமைப்பில் ஏற்பட்டிருந்த தொழில் நுட்பக் கோளாறு சீர்செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை ஒரு நாள் தாமதத்துடனேயே முன்னெடுக்கப்படுமென குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இந்த வாரம் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள பதிவுசெய்துள்ளவர்கள் தாம் பதிவுசெய்துள்ள நாளுக்கு மறுநாள் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள வருகை தருமாறு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

கணினி கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்று முன்தினம் (13) கடவுச்சீட்டு வழங்குவதில் இடையூறு ஏற்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்திருந்தது.

இதன்படி, நாடளாவிய ரீதியிலுள்ள அலுவலகங்களிலும் கடவுச்சீட்டு வழங்குவதற் கான தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன்காரணமாக நேற்று முன்தினம் (13) கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளவுள்ளவர்களுக்கு நேற்று (14) மதியம் 12 மணிக்குப் பின்னர் கடவுச்சீட்டு வழங்கப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் வெள்ளிக்கிழமை கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முன்பதிவு செய்துள்ளவர்களுக்காக எதிர்வரும் சனிக்கிழமை கடவுச்சீட்டுகள் வழங்கப்படும் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கடவுச்சீட்டு விநியோக சேவைகள் வழமைக்குத் திரும்புமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பிலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்துக்கு வருகை தந்திருந்த பொது மக்கள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

நேற்று முன்தினம் (13) காலை முதல் நீண்ட வரிசையையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அங்கு வருகைதந்திருந்த சிலர் நேற்று முன் தினத்திலிருந்து காத்திருப்பதாகவும் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தனர்.

தமது காலம் வீணாக்கப்படுவதாகவும், ஒன்லைனில் பதிவுசெய்யும் திட்டங்கள் இருக்குமாக இருந்தால் இதுதொடர்பில் எங்களுக்கு குறுஞ்செய்தியாவது அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கலாம் என்றும் மக்கள் தெரிவித்திருந்தனர்.

முஸ்லிம் மக்களை அவமதித்தது ராஜபக்ஷக்களே!

புத்தளத்தில் சுட்டிக்காட்டினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

இந்நாட்டு முஸ்லிம் மக்களுக்கு மிகப்பெரிய அவமதிப்பைச் செய்தது ராஜபக்ஷக்களே எனவும், கொவிட் காலத்தில் அடக்கம் அல்லது தகனமா என்ற விடயத்தில் அவர்கள் நினைத்தது போல் செயற்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் (13) இடம்பெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

போராட்டத்தின் மூலம் கோரப்பட்ட எந்த மாற்றமும் இதுவரை எட்டப்படவில்லை எனவும், அமைச்சை ரீதியாக போராட்டத்தில் ஈடுபட்டவன் என்றவகையில் இது குறித்து தாம் வருந்துவதாகவும், வன்முறையை விரும்பும் சில அரசியல் குழுக்கள் இந்நாட்டைப் பொறுப்பேற்கிறோம் என்ற கூறுவது நகைப்புக்குரியது எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இன்றும் இந்நாட்டை ஆள்வது ராஜபக்ஷ நிழல் அரசாங்கமே என்பதனால், ராஜபக்ஷக்களினால் துண்டப்பட்ட இனவாதத்தை அழித்து சகோதரத்துவம் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்றும், ராஜபக்ஷக்களின் இந்த நிழல் அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலகின் பிற நாடுகள் நம்மைப் பின்னால் இருந்தாலும், இந்நாடுகள் இப்போது நம்மை விட முன்னேறியுள்ளதாகவும், நாமும் அந்த வழியில் பயணிக்க ஒரு புதிய தொடக்கத்திற்கு செல்ல வேண்டும் எனவும், புதிய தொழில்நுட்பம் போக்குகள் மற்றும் திட்டங்கள் மூலம் இளைஞர்களை வலுவூட்டி நாட்டில் தகவல் தொழில்நுட்பப் புரட்சியை உருவாக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையில் சட்டத்தரணி றெமீடியஸுக்கு நேற்று அஞ்சலி

வீதி விபத்தில் சிக்கி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்த யாழ்.மாநகர சபை உறுப்பினர் மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மாநகர சபை கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டதுடன், மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தினர்.

இதேவேளை சட்டத்தரணி மு.றெமிடியஸின் இறுதிக் கிரியைகள் இன்று (15) புகன்கிழமை பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் நடைபெற்று, மாலை 3 மணியளவில் பாசையூர் அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ்ப்பாணம் சென் மேரிஸ் மேல்கலாலயில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

யாழ்.மாநகர சபை உறுப்பினரும் பிரபல மூத்த சட்டத்தரணியுமான மு.றெமிடியஸ் கடந்த 7ஆம் திகதி சிறுப்பிட்டி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது நாய் ஒன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

துறைமுக அதிகாரசபையின் 1121 வாகனங்களை விற்க கேள்வி மனு கோரப்பட்டதாக போலி செய்தி

துறைமுக அதிகாரசபை மறுப்பு

துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான 1121 வாகனங்களை விற்பனை செய்வதற்கு கேள்வி மனு கோரப்பட்டுள்ளதாக வந்த செய்தி போலியானதென துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

துறைமுக அதிகாரசபையால் 1121 வாகனங்களை விற்பனை செய்வதற்கு துறைமுக அதிகாரசபை கேள்வி மனு கோரவில்லை எனவும் சமூக ஊடகங்களில் போலி ஆதும் பரவி வருவதாக துறைமுக அதிகாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்தக் கடிதத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள தலையெழுத்து போலியானது என்பதுடன், அவ்வாறு கையொப்பமிடப்பட்டதாகக் கூறப்படும் நபர் அத்தகைய கடிதத்தில் கையொப்பமிடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

கட்டாக்காலிகளை கட்டுப்படுத்துமாறு யாழ். மாநகர சபை அமர்வில் கோரிக்கை

யாழில் தெருநாய்கள், கட்டாக்காலி மாடுகளை மாநகரசபை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் து.இளங்கோ யாழ். மாநகர சபை அமர்வில் கோரிக்கை விடுத்திருந்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் 2023ஆம் ஆண்டு பாதீடு நேற்று (14) சபையில் சமர்ப்பிப் பதற்கான விசேட அமர்வு முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த அமர்வில் கலந்துகொண்டு உரை யாற்றும்போது ஈபிடிபி உறுப்பினர் இளங்கோ மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

நாய்களை கட்டுப்படுத்துங்கள் வீதிகளில் திரிகின்ற நாய்களை யாழ். மாநகர சபை கட்டுப் படுத்த வேண்டும். அத்தோடு மாடுகளையும் கட்டுப்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் உறுப்பினர்கள் கவனம் செலுத்தவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, யாழ். மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி மு.றெமிடியஸ், மோட்டார்சைக்கிளில் பயணித்தபோது, வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான நிலையில், சிகிச்சை பலனின் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

செலான் வங்கி பீ.எல்.சி.

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் கட்டளை அறவிப்புப்பத்திரம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

செலான் வங்கி (பீ.எல்.சி.) - கடுநேரிய கிளை
பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை

கடுநேரியவில் வசிக்கும் வர்ணகுலசூரிய வெளிடார அதேவா பொன்னம்பேரு என்பவர் "கூப்பாட்டாவராகவும்/அல்லதுகூவர்ராகவும்" என்ற வகையில் கொடுப்பனவிலும் தவணை தவறியுள்ளார் ஆதலால் செலான் வங்கி பீஎல்பிளிள் சார்பாக பிரதித்த நொத்தாரிசு W.S.N.பொன்னம்பேரு என்பவரால் அனைத்தையும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.04.24ஆம் திகதி 1473ஆம் இலக்க சுட்டு முறி, 2015.06.24ஆம் திகதி 1499ஆம் இலக்க சுட்டு முறி மற்றும் 2015.11.05ஆம் திகதி 1576ஆம் இலக்க சுட்டு முறிகளின் கீழ் சொன்ன வங்கி பீஎல்பியில் அடமானவைக்கப்பட்ட இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சற்றாடலுமானது,

2023ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் திகதி முப. 11.00 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி., இல. 90, காலி வீதி, கொழும்பு 3 இல் உள்ள வளாகத்தில் என் மூலமான பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏலவிற்பனையானது, கௌரவ அமைச்சின் கொவிட் 19 சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டல்களுக்கும் அமைவாகவே நடத்தப்படும்.

அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் மாரவில பதினாறாம் பிரிவுக்குள் வடக்கு பிடிகல் கோமேதகே பிரதேசத்தில் நாதகன்ன்ய பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட மற்றும் பிரதேச செயலாளர்பிரிவிற்குள் இல்ல கடுநேரிய கிராமத்தில் அமைந்துள்ள கிணி கெல்ல என அழைக்கப்படும் காணிக்குரத்தரவு பெற்ற நில அளவையாளர W.L.H.பொன்னம்பேரு என்பவரினால் 2005.03.13 ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 12608 இலக்க நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது மொட் 02 என அடையாளப்படுத்தப்பட்டு பிரிக்கிறதாகக்கப்பட்ட காணித் துண்டின் பரப்பளவானது ஒரு ரூட் பேச்சஸ் (0.00.ஹ.01-ஹே.10) கொண்ட விசாலமான கட்டடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துடன் ஆகும்.

காணிக்குப் பிரவேசிக்கும் வழி- கடுநேரிய சொன்ன வங்கி பீ.எல்.பியின் வளாகத்தில் இருந்து மாரவிலைநோக்கி 1.3 கி.மீற்றர் தூரம் பன்சல சந்தி வரை சென்று வலது பக்கத்தில் உள்ள பனிஞ ஜூட மாவத்தை ஊடாக 1.6 கி.மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கத்தில் உள்ள பிரதேச சபை மின்பாலை நோக்கி 1.3 கி.மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கத்தில் உள்ள மின்பாலை 100 மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கத்தில் உள்ள மின்பாலை 150 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு இடது பக்கத்தில் அமைவாக இவ் விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

தீர்மான முடிவு அறிவித்தல்கள்: 2021.11.12 ஆம் திகதிய இலங்கைச் ஜனாயக சோஷலிக்க சூயராசியவர்த்தமானியிலும் 2021.10.22ஆம் திகதி பெய்லி மிரர், அத மற்றும் திணகுரல ஆகிய பத்திரிகைகளிலும்பிரசுரிக்கப்பட்டுள்ளது.

வட்டணங்கள் தொடர்பும் விதிகளும்:- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டளைகளை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% (2) உள்ளுராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% (4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான தொகுதிக்கு கட்டணம் 3000/-
(5) இலிகிதர் மற்றும் கூவுனோர் கட்டணம் (6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

சொன்முதல் விலையின் 90% வீதத்தையும் மிகுதி இலங்கை அரசாங்கத்தினரோல அல்லது வேறு அதிகாரசபையினரோ விதிக்கப்படும் கட்டளையான வரி அல்லது கட்டணங்கள் ஏறுமதிருப்பின் அவற்றோடு,ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் சொன்ன வங்கி பீ.எல்.சி. தாபகத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெறுகொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை மேற்கொள்ளலாம். உதவி பொது முகாமையாளர், (சட்டம்), 14ஆவது மாடி, செலான் வங்கி பீ.எல்.சி., இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456485, 011-2456479 மற்றும் 011-2456473

மேலே உள்ள ஏல விற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கோ அல்லது இரத்து செய்வதற்கோ உரிய சகல அதிகாரங்களும் வங்கிக்கு உண்டு.

சதித்மா பிரியதர்ஷனீ சமரே,
நிதியல்ல ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-1, சதாலெல்ல வீதி,
சர்வோதய மாவத்த, பளாகொட, தேசாமகம.
தொலைபேசி இலக்கம்: 0714318252

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

14.02.2023 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	137 0456	148 2 03
கனேடியன் டொலர்	156 5571	168 0351
சீன யுவான் (ரென்மின்பி)	40 7303	43,8161
யூரோ	272 2683	287 5878
ஜப்பான் யென்	1 6 3	1 7025
சிங்கப்பூர் டொலர்	157 8586	17 28
ஸ்ரேலிங் பவுன்	323 7026	34 5 4
சுவிஸ் பிராங்ஸ்	277 2826	3 4 44 6
ஐ.அ.டொலர்	248 5344	258 8412

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	848,8252
குவைட்	குவைட் தினார்	0,071 5567
ஓமான்	ஓமான் றியால்	83 20
கட்டார்	கட்டார் றியால்	88 124
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 3353
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 4215

தேசிய வளங்கள் நிதியம்
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
NLB
திங்கட்கிழமை 2023.02.13
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத்
சீட்டிழுப்பு இலக்கம் 5030
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,069,572.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 0 4 9 6 5 3

கொவிதெத
சீட்டிழுப்பு இலக்கம் 3272
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,626,829.60
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 12 22 53 54

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1485
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,579,047.60
வெற்றி இலக்கங்கள் 7 9 2 0 2 1

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1060
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,569,724.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 09 18 40 50

ராசிக்ய மஹல்
சீட்டிழுப்பு இலக்கம் 339
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,867,100.60
வெற்றி இலக்கங்கள் 02 12 15 41
விசேட இலக்கங்கள்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1378
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 300,045,226.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 04 09 13 26 76
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

யாழ். மாநகர சபை முதல்வர் வர்த்தமானி விவகாரம்; மார்ச் 7இல் நீதிமன்றம் இடைக்கால கட்டளை

(யாழ். நிருபர்)

யாழ். மாநகர சபை முதல்வர் ஆர்னோல்ட் முதல்வராகப் பிரகடனப்படுத்தப்பட்ட வர்த்தமானி தொடர்பான வழக்கின் விசாரணைகள் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நிறைவுற்றுள்ள நிலையில், மார்ச் 7ஆம் திகதி வழக்கு தொடர்பாக இடைக்கால கட்டளையிடப்படவுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, ஜனவரி 20ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் யாழ். மாநகர சபையின் முதல்வராக இ.ஆர்னோல்ட் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில், யாழ். மாநகர சபை முதல்வர் ஆர்னோல்ட் முதல்வராகப் பிரகடனப்படுத்தப்பட்டமை சட்டவிரோதமானது எனக் கோரி, அதனடிப்படையில் அவரது பதவி நியமனம் குறித்த வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக அறிவிப்பதற்கும், முதல்வராக ஆர்னோல்ட் தொடர்வதற்கும் இடைக்காலத் தடை உத்தரவு விதிக்குமாறு கோரியும் யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் தொடுத்துள்ள மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது இரு தரப்புகளின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த மேல் நீதிமன்றம் மார்ச் 7ஆம் திகதி வழக்கு தொடர்பாக இடைக்கால கட்டளையிடவுள்ளது.

குறித்த வழக்கில் யாழ். மாநகர முதல்வர், யாழ். மாநகர ஆணையாளர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் மனுதாரரான யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் சார்பில் கு.குருபரன், வி.மணிவண்ணன் ஆகியோரும் ஆஜராகினர்.

யாழ். மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் 8 வாக்குகளால் தோற்கடிப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 8 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் அதன் தற்போதைய முதல்வர் இ. ஆர்னோல்ட்டினால் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாக்கெறிப்பில் 40 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். ரெலோ கட்சியின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதி முதல்வர் து.ஈசன், புளொட்டைச் சேர்ந்த பி.தர்சானந்த், கு.கபாகரீஸ் ஆகிய இரண்டு உறுப்பினர்களும், ஸ்ரீ ஸங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் எஸ்.சாந்தரூபனும் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை.

வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக 24 வாக்குகளும், ஆதரவாக 16 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதேவேளை, முன்னர் முதல்வராக இருந்த ஆர்னோல்ட் முதல் தடவை சமர்ப்பித்த வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் முதல்வராக தொடர்ந்தவர் 2020ஆம் ஆண்டு சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமையால் அவரது முதல்வர் பதவி வறிதாகியது.

அதனையடுத்து புதிய முதல்வராக சட்டத்தரணி வி. மணிவண்ணன் முதல்வராக பதவியேற்றார். மணிவண்ணனின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட முதல் வாசிப்பு தோற்கடிக்கப்பட்ட நிலையில் திருத்தங்களுடன் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளதாக தனது பதவியை இராஜினாமா செய்தார்.

மீண்டும் புதிய முதல்வராக ஆர்னோல்ட் தெரிவானார். இந்நிலையில், நேற்று அவரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஆர்னோல்ட் முதல்வராக பதவியேற்ற காலம் முதல் அவரால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் இறந்த ஆண் ஒருவரின் எச்சங்கள் மீட்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் (13) இறந்த ஆணொருவரின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஈரப்பெரியகுளம் புதிய நகர்ப் பகுதியின் காட்டுப்பகுதியில் இம் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அவை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன் அதே பகுதியில் வசித்துவந்த காணாமல்போன ஒருவரு சடமாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வசித்து வந்த 43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தற்தையான ஜிந்தக்க ராஜபக்ஷ என்பவர் கடந்த 9 மாதங்களுக்கு முன் காணாமல்போயுள்ளார். இந்நிலையில், இம் மனித எச்சங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதனால் இது காணாமல்போனவரின் உடல் அங்கங்களாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா ஈரப்பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கனேடியத் தூதுவர் யாழ். பல்கலைக்கு விஜயம்

(யாழ். நிருபர்)

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடியத் தூதுவர் எரிக்வோல்ஸ் நேற்று முன்தினம் (13) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

கனேடிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையினால் நடத்தப்படும் என்லீப் செயற்திட்டத்தின் மீளாய்வுக்காகவே கனேடியத் தூதுவர் தலைமையிலான குழு பல்கலைக்கழகத்துக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

இந்த விஜயத்தின்போது, துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.கே.கண்ணதாஸ் ஆகியோருடனும், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை மாணவர்களுடனும் கனேடியத் தூதுவர் கலந்துரையாடி, நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

யாழ். மாநகர முதல்வருடன் கனடா தூதுவர் சந்திப்பு

(யாழ். நிருபர்)

இலங்கைக்கான கனடாவின் தூதுவர் எரிக்வோல்ஸ் யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்டை சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். மாநகர சபைக்கு நேற்று முன்தினம் (13) விஜயம் செய்த கனடாவின் தூதுவர் குறித்த சந்திப்பில் ஈடுபட்டார்.

இதன்போது யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் யாழ். மாநகர சபை உறுப்பினர் ந.லோகதயாளனும் உடனிருந்தனர்.

பசறை அமைப்பாளராக மீண்டும் சுரேஷ் எம்.பியை நியமிக்குக

ஐக்கிய மக்கள் சக்தியிடம் கோரிக்கை முன்வைப்பு

(என். மலர்வேந்தன்)

ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தொகுதி அமைப்பாளராக மீண்டும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வேண்டுமென பசறை, லுணுகலை ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர்களும் 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ள உறுப்பினர்களும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மடுல்சீமையில் கடந்த 9ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷின் தலைமையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது. இந்த பிரசார கூட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வருகைதரவிருப்பதாக மக்களிடையே ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், கூட்டம் இடம்பெற்றபோது அதில் கலந்துகொள்வதற்காக மடுல்சீமை வீதி 5ஆம் கட்டை வரை வருகைதந்து சுகயீனம் காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் மீண்டும் திரும்பிச் சென்றதாக சுமார் 12.30 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷினால் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட தொழிலுக்கும் செல்லாமல் எதிர்க்கட்சித் தலைவரின் வருகைக்காக காத்திருந்து ஏமாற்றமடைந்தோடு அங்கிருந்த மக்களிடையே சிறிது நேரம் பதற்ற நிலையும் ஏற்பட்டது. இதன்போது பொலிஸார் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இதேவேளை, அன்று மாலை வெலிமடை பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்து கொண்டிருந்தார். இதன் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தான் மன உளைச்சலுக்கு ஆளானதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் சகல பதவிகளில் இருந்தும் தான் விலகுவதாக ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

தற்போது உள்ளூராட்சித் தேர்தல் காலம் என்பதால் பசறை, லுணுகலை உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர்கள் பாரிய மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பசறை தேர்தல் தொகுதி அமைப்பாளராக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வேண்டும் என்றும் தங்களது வெற்றிக்கு அவரது ஆதரவு வேண்டும் எனவும் பசறை, லுணுகலை ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் வேட்பாளர்களும் கூட்டாக நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் சனியன்று சிவராத்திரி விழா

(செ.திவாகரன்)

நுவரெலியா ஸ்ரீஇலங்காதீஸ்வரர் ஆலய காயத்ரி பீடத்தில் மகா சிவராத்திரி விழா எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற ஆலய அறங்காவலர் சபையினரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறங்காவலர் சக்திவேல் சந்திரமோகன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் விஷேட ஸ்நபனாபிஷேகம் மற்றும் நான்கு சாமங்களின் பின் ஸ்ரீஇலங்காதீஸ்வரப் பெருமானுக்கு விஷேட அபிஷேக அலங்கார பூஜைகளும் நடைபெறும்.

பன்னிரண்டு வயது முதல் பன்னிரண்டு வருடங்கள் கும் தவம் செய்த ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிவபாலயோகி சுவாமிகளுக்கு சாட்சாத் சிவபெருமானின் உத்தரவின் பேரில் புனித தாம்தா நதியில் பெறப்பட்ட 108 பாணலிங்கங்களுக்கும் பக்தர்களின் கரங்களினால் மாலை 6 மணி தொடக்கம் பால், இளநீர் கொண்டு அபிஷேகம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் இரண்டாம் சாம பூஜையின் பின் சிவ திருவுருவச்சிலை, பாணலிங்கங்கள் மற்றும் குரு திருவுருவச்சிலை ஊர்வலமாக ஆலயத்திலிருந்து குரு பீடத்திற்கு எடுத்து வரப்பட்டு குருபூஜை, காயத்ரி பூஜை மற்றும் விசேட மூலிகைகளை கொண்டு நடைபெறும் மகாபிருத்யுஞ்ஜெய யாகத்தில் பக்தர்களினால் ஆகுதி கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு சிவபுஞ்சார்ச்ர மந்திர பாராயணம், தியானம், பஜனை, பிரார்த்தனை மற்றும் அருளுரைகளும் என்பனவும் இடம்பெறவுள்ளன.

மேலும், காயத்ரி சித்தர் ஸ்ரீமுருகேச மகரிஷி அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். நான்காம் சாம பூஜைகளின் பின் மறுநாள் காலை 6 மணியளவில் பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் வழங்கி பூஜைகள் இனிதே நிறைவு பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வலம்புரி சங்கு கடத்திய இருவருக்கு விளக்கமறியல்

(மனுர சுதத் செல்லஹேவா)

வலம்புரி சங்கு ஒன்றை ஆறு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்தபோது ஹட்டனில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் இருவரையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது நீதவான் மொஹமட் பரீட்தீன் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். வலம்புரி சங்கை விற்பனை செய்வதற்காக இருவர் முயற்சிகளை மேற்கொள்கின்றனரென இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் அவர்களை கைதுசெய்த புலனாய்வுப் பிரிவினர், ஹட்டன் பொலிஸாரிடம் அவர்களை ஒப்படைத்தனர். அத்துடன் அவர்கள் வசமிருந்த வலம்புரி சங்கும் மீட்கப்பட்டது.

சந்தேக நபர்களை அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அதனடிப்படையில் நேற்றைய தினம் மீண்டும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரியில் காடழிப்பு தீவிரம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி எனஸ்கம உள்ளிட்ட காட்டுப்பகுதிகளில் சட்டவிரோத மரம் தரித்தல், மரம் கடத்தல், காடழிப்பு முயற்சிகள் நீண்ட காலமாக இடம்பெற்று வருவதாக பிரதேச மக்கள் முறையிடுகின்றனர்.

இச்செயற்பாடுகள் காரணமாக இப்பிரதேச வனப்பகுதி பரவலாக பாதிக்கப்படுவதுடன் காட்டு மிருகங்கள் பிராணிகள் வேறு இடங்களுக்கு தப்பிச் செல்வதாகவும் பிரதேச நீர் வளங்கள் வற்றி வருவதாகவும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இவ்விடயத்தில் பாதுகாப்பு தரப்பினரின் கவனம் திரும்பியுள்ளபோதிலும் அரசியல் அதிகாரத் தரப்புகளின் ஒத்துழைப்புகள் காரணமாக இச்செயற்பாடுகள் தொடர்ந்து வருவதாக கிராம வாசிகளும் சூழலியலாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

(உக்குவளை செய்தியாளர்)

2022ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கலுஹின்ன ஆரம்ப பாடசாலை மாணவன் ஆர். கன்கல இல்மாம் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் கல்ஹின்ன ரயாய்தீன் - பர்ஹானா ஆகியோரது புதல்வராவார்.

கண்டி ஸ்ரீகதிரேசன் ஆலய சூரசம்ஹார நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். (படப்பிடிப்பு: கண்டி செய்தியாளர்)

மருதமுனையின் முதல் நிர்வாக சேவை அதிகாரி அன்சார் 38 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு

(கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்)

மருதமுனையின் முதல் நிர்வாக சேவை விசேட தர அதிகாரி ஏ.எச்.எம்.அன்சார் ஆசிரிய சேவையில் 6 வருடங்களும், நிர்வாக சேவையில் 32 வருடங்களுமாக 38 வருட அரச சேவையில் கிழக்கு மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்), சுகாதார, சுதேச வைத்திய, சமூக சேவைகள், சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை மற்றும் கிராமிய மின்சார அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, திறன் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு என்பவற்றில் செயலாளராக சிறப்பாகக் கடமையாற்றி 2022-12-31ஆம் திகதி ஓய்வுபெற்றார்.

இவரது பதவிக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தவர். அத்துடன், அமைச்சுகளின் கீழ் வருகின்ற வேலைத்திட்டங்களை பாகுபாடின்றி விகிசாரத்திற்கேற்ப பகிர்ந்தளித்தவர். பெருந்தொகையான வீதிகள் புனரமைப்பு, மின்சார அபிவிருத்தி, சமூகசேவை அபிவிருத்தி மற்றும் வைத்தியசாலைகள் தரமுயர்த்தல், புனரமைத்தல், அபிவிருத்தி என்பவற்றில் அதிக அக்கறை காட்டி செயற்பட்டவர். பதவி உயர்வுகள், நியமனங்கள் என பலரின் வாழ்வியலுக்கு வழிகாட்டியவர்.

இவர் ஆடம்பரம் இல்லாமல் அமைதியாக இருந்து மக்களுக்கு ஆழமான சேவையாற்றிய நிர்வாக ஆளுமை. கடமையில் இல்லாத நேரத்தில் அரச வாகனத்தைப் பயன்படுத்தாத அரச அதிகாரி. தனது சைக்கிளிலும், மோட்டார்சைக்கிளிலுமே தனது பயணத்தை மேற்கொள்வார். நிர்வாக சேவை அதிகாரியாக இருந்து சொத்து சேர்க்காத நேர்மையான அதிகாரி. தனது பதவிக்காலத்தில் தனது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் இன, மத, வேறுபாடின்றி மக்களுக்கு சேவையாற்றியதுடன், பதவி சாராத வகையிலும் பலரின் தேவைகளை நிறைவுசெய்து கொடுத்த ஆளுமை.

இவர் மருதமுனையைச் சேர்ந்த மீராலெப்பை அப்துல் ஹமீட் - முகம்மது தம்பி அவ்வா குட்டி தம்பதிக்கு மகனாக 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர். முதலாம் வகுப்பு தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கல்வி கற்று புலமைப்பரிசில் முதல் பரீட்சையில் சித்தியடைந்தவர். ஆறாம் வகுப்பு தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம் வரை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் கல்வி கற்றவர். க.பொ.த. உயர் தரத்தில் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்று உயர்தர பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் நிலையைப் பெற்று 1983/1984 கல்வியாண்டுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ நிர்வாகப் பிரிவுக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

1984ஆம் ஆண்டுகாலப் பகுதியில் நடைபெற்ற ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தார். 1984-12-27ஆம் திகதி ஆசிரியர் நியமனம் பெற்று ஆசிரியராக அநுராதபுரம், ஹொரவப்பொத்தான தேர்தல் தொகுதியின் வீரச்சோலை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியராக அரச சேவைக்குள் நுழைந்தார்.

அங்கு ஆசிரியராக 4 வருடங்களும் நான்கு மாதங்களும் கடமையாற்றி 1986ஆம் ஆண்டு தொடக்கம் 1989-04-18ஆம் திகதிவரை அதிபராகவும் கடமையாற்றி அங்கிருந்து விடைபெற்றார். பின்னர் 1989-04-19ஆம் திகதியிலிருந்து 1991-04-18ஆம் திகதிவரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலையில்) ஆசிரியராகக் கடமையாற்றினார்.

1990ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து 1991-04-19ஆம் திகதி மருதமுனையின் முதலாவது நிர்வாக சேவை அதிகாரியாக தெரிவாகி அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்

பின்னர் சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு 1994-09-01ஆம் திகதி உதவிப் பிரதேச செயலாளராக இணைக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து 2001-10-17ஆம் திகதி பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலாளராக நியமனம் பெற்று கடமையாற்றிய நிலையில் 2003-07-07ஆம் திகதி கல்முனை பிரதேச செயலகத்தில் பதில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி 2003-09-09ஆம் திகதி நிரந்தர பிரதேச செயலாளராக கடமையேற்றார்.

சுனாமியின் பின்னராான பணி

கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் சுனாமியின் பின்னரான மீள் எழுச்சியின் பிதாமகன் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் என்றால் அது மிகையாகாது. 2004.12.26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் இப்பிரதேசத்தின் மீள்புனரமைப்புக்காக இரவு பகலாக பாடுபட்டவர். சுனாமிப் பேரலை தாக்கிய பின்னர் பாதிப்புக்குள்ளான மக்களை உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டுசெல்வதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துவைத்து மக்களைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டினார்.

மரணித்தவர்களை நல்லடக்கம் செய்வதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து மருதமுனை, கல்முனை, றதிப்பிட்டமுனை, மத்திய முகாம், சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு துரிதமாகச் செயற்பட்டு நல்லடக்கப் பணியில் ஈடுபட்டார். அத்துடன், உடலுதவி தேவைகளாக இருந்த மருத்துவ சேவை, பராமரிப்பு, தற்காலிக முகாம்கள், சமைத்த உணவு குடிநீர், ஆடைவகைகள், மருந்துவகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுத்தார். அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக தற்காலிக கூடாரங்கள், சமையல் உபகரணங்கள், படுக்கை விரிப்புகள் உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான அனைத்துத் தேவைகளையும் பெற்றுக்கொடுத்து மக்களை ஆசுவாசப்படுத்தினார்.

வீட்டுத் திட்டங்கள், வீதிகள் அமைத்தல், பாடசாலைகள் நிர்மாணம், வைத்தியசாலை நிர்மாணம் மற்றும் இதுபோன்ற பல இன்னோரன்ன நடவடிக்கைகள் அனைத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு ஏனைய பிரதேசங்களையும் விட சிறப்பாக மீள்நிர்மாணம் செய்ய நடவடிக்கை எடுத்தார். இதேவேளை, கல்முனை தமிழ்ப் பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கான காணி சம்பந்தமான விடயங்கள் மற்றும் வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றையும் சிறப்பாக செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு கல்முனை இறைவரிக் கண்டத்தில் 13 ஏக்கர் காணியையும், மருதமுனையின் மேற்குப் புறத்தில் மேட்டு வட்டையில் 33 ஏக்கர் காணியையும், கல்முனை இஸ்லாமாபாத் பிரதேசத்தில் 7 ஏக்கர் காணியையும் அரசாங்கத்தால் சுவீகரித்தும், அரச நிதியில் வாங்கியும் கல்முனை, மருதமுனை, இஸ்லாமாபாத், பெரியநீலாவணை, அக்பர் கிராமம் போன்ற பிரதேசங்களில் வீட்டுத் திட்டங்கள், பாடசாலைகள், வைத்தியசாலை, கல்வி அலுவலகம் மற்றும் அரச அலுவலகங்கள் என பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தார்.

பின்னர் 2007-05-17ஆம் திகதி மீண்டும் பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டார். அங்கு 2010-05-10ஆம் திகதிவரை சிறப்பாக கடமைகளை முன்னெடுத்தார். சூறித்த காலப்பகுதியில் அக்கரைப்பற்று மற்றும் வாகுகல பிரதேச செயலகங்களிலும் பிரதேச செயலாளராகக் கடமையாற்றியுள்ளார். இதன் பின்னர் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றினார்.

2011-01-01ஆம் திகதிமுதல் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கட்டடங்கள், வீடமைப்பு நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் 2015-06-05ஆம் கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக (நிர்வாகம்) கடமையேற்று சிறப்பான வகையில் நிர்வகித்தார். 2017-09-06ஆம் திகதி கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக சேவைகள், சிறுவர் பராமரிப்பு, நன்னடத்தை மற்றும் கிராமிய மின்சார அமைச்சுக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இக்காலகட்டத்தில் வெளிநாடு மற்றும் உள்நாட்டு உதவிகள் மூலம் கிழக்கு மாகாண வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அதன் பின்னர் 202202-07ஆம் திகதி தொடக்கம் மீண்டும் வீதி அபிவிருத்தி, காணி மற்றும் காணிகள் அபிவிருத்தி, திறன் மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் 2010-07-01ஆம் திகதியிலிருந்து இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டு பணியாற்றிய நிலையில் 2022-12-31ஆம் திகதி தனது அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மருதமுனை அல்-ஹம்றாவில் 20 பேர் சித்தி

அதிபர்
ஐ.உபைதுல்லாஹ்

ஆசிரியர்
எம்.எல்.நௌஸாத்

ஆசிரியர்
எம்.எஸ்.சாதாத் அலி

எம்.ஆர்.ஆபிஸ்
அய்லா -177

எஸ்.சான்சியா ஸைத் -
170

எஸ்.பாத்திமா அனீகா -
168

எம்.ஏ.அயிஷா மின்சி -
165

எம்.எச்.அபுல் பசரி -
164

எம்.ஜே.ஹைதம்
முகம்மட் - 162

எம்.ஆர்.ஹமி மிஸ்னப் -
160

எம்.ஆர்.மஹ்றத்
அஹமட் - 157

எம்.என்.அனிக்கா
திஹினி -156.

எம்.எஸ்.அயாஸா -
156

எம்.எஸ்.சம்ஸான்
அஹமட் -155

ஏ.ஏ.சபி அஹமட் -
153

எம்.இஷட் பாத்திமா
அபியா -152

எம்.ஜே.பதா பஹ்மத் -
149

எல்.ஜஸ்மத்
ஜெதா -148

ஏ.என்.அரீப்
அஹமட் -146

எம்.ஜே.அலிஸ்பா மன்ஹா
-146.

எம்.வை.அப்ஜஸ் -
145.

எம்.ஐ.பாத்திமா அஸ்ரா -145.

எம்.எவ்.அல்லாலீன்-144

கடந்த வருடம் (2022) டிசம்பர் மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகளின்படி மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் இருபது மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இங்கு 53 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 20 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். மாணவி முகம்மட் நியாஸ் ஆபிஸ் அய்லா 177 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பாடசாலைக்குச் சென்று சித்தியடைந்த மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களான எம்.எல்.நௌஸாத், எம்.எஸ்.சாதாத் அலி மற்றும் அதிபர் ஐ.உபைதுல்லாஹ் ஆகியோரையும் பாராட்டியுள்ளார்.

(கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்)

அமைச்சரவைத் தீர்மானங்கள்

2023.02.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்கள்

01. இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக 2023 ஜனவரி மாதம் 09 மற்றும் 10ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை

இருதரப்பினரும் பல துறைகளில் பொருளாதார ஒத்துழைப்புகளை பலப்படுத்துவதன் மூலம் மேலும் விருத்தி செய்யக்கூடிய பொருளாதார சாத்தியவளங்கள் மற்றும் முழுமைப்படுத்த வேண்டிய பொருளாதாரக் கட்டமைப்புகளை அடையாளங்கண்டு தற்போது காணப்படுகின்ற இருதரப்பு வர்த்தகப் பெறுமதியான 550 மில்லியன் அமெரிக்க டொலர்களை 1.5 பில்லியன் டொலர்கள் வரைக்கும் அதிகரிக்கின்ற நோக்குடன் இலங்கை மற்றும் தாய்லாந்துக்கு இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கான அடிப்படை நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைய, பண்டங்கள், ஆற்றல்வளம் தொடர்பான ஒழுங்குகள், சேவைகள், முதலீடுகள், பொருளாதார ஒத்துழைப்புகள், பொருளாதார பரிகாரங்கள், சுங்க நடவடிக்கை முறைகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்காக 2018.07.03ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2018 ஜூலை மாதம் முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தை இலங்கையிலும், இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை 2018 செப்டெம்பர் மாதம் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலும் நடத்தப்பட்டன. அதன் மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை 2023 ஜனவரி மாதம் 09ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்தப்பட்டதுடன், குறித்த பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் பற்றி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த தகவல்கள் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது.

02. இந்தோனிசிய குடியரசின் தேசிய கண்காணிப்பு மற்றும் மீட்பு முகவர் நிறுவனம் மற்றும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கும் இடையிலான ஒப்பந்தம்

இலங்கை சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் சிக்காக்கோ சமவாயத்தில் கையொப்பமிட்ட அரசாக எமது நாட்டில் வான்பரப்பில் பறப்பதற்காக அனைத்து விமானங்களுக்கான விமான நிலைய சேவைகள்/விமான சேவைகள், விமானப் பயணங்கள் பற்றிய தகவல் சேவைகள் மற்றும் அபாய எச்சரிக்கை சேவைகள் வழங்கவேண்டியதுடன், அதற்கான கடப்பாடுகளையும் கொண்டுள்ளது.

கொழும்பு வான்பரப்பு தகவல் வலயத்தின் தென்கிழக்கு எல்லை இலங்கை மற்றும் இந்தோனேசியா கூட்டாக பயன்படுத்தி வருகின்ற அயல் நாடாகும். குறித்த வலயத்தில் கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் பொறுப்பு இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. சர்வதேச சிவில் விமான சேவைகள் நிறுவனத்தின் சிக்காக்கோ சமவாயத்திற்கமைய கண்காணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பைப் பலப்படுத்துவதற்காக ஆட்புல பூகோளப் பிரதேசத்தில் கண்காணிப்பு மற்றும் மீட்பு அலகுகளுக்கு உள்நுழைகின்ற நிபந்தனைகளைக் குறிப்பிட்டு அருகிலுள்ள அரசால் அயல்நாட்டு அரசுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வது அவசியமாகும்.

அதற்கமைய, இலங்கையில் சிவில் விமான சேவைகள் அதிகாரசபை மற்றும் இந்தோனிசிய குடியரசின் தேசிய கண்காணிப்பு மற்றும் மீட்பு முகவர் நிறுவனத்துடன் 05 வருடகாலப்பகுதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2018ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்டதுடன், குறித்த காலப்பகுதி தற்போது முடிவடைந்துள்ளது. இருதரப்பினர்களுக்கிடையேயான ஒத்துழைப்புகளைத் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு இயலுமாகும் வகையில் 2023.01.23ஆம் திகதி தொடக்கம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் 05 வருடங்களுக்கு நீடிப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

03. பங்களாதேசம் – இலங்கை ஒருங்கிணைந்த ஆலோசனை ஆணைக்குழுவை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

இரு நாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார, தொழிநுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியான கொன்சியூலர் மற்றும் கலாசார ஒத்துழைப்புகள் உள்ளடக்கிய இருதரப்பு உறவுகளை ஊக்குவித்தல், பலப்படுத்தல் மற்றும் விரிவாக்கம் செய்யும் நோக்கில் பங்களாதேஷ் - இலங்கை ஒருங்கிணைந்த ஆலோசனை ஆணைக்குழுவை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தரப்பினர்களுக்கிடையேயான ஒத்துழைப்புகளை அனைத்து துறைகளிலும் இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களின் மட்டத்தில் மீளாய்வு செய்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் ஒத்துழைப்புகளின் புதிய துறைகள் பற்றி ஆராய்வதற்கான பொறிமுறையாக, முன்மொழியப்பட்டுள்ள ஆலோசனை ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. இலங்கையின் வெளிவிவகார அமைச்சு மற்றும் ஜோர்தான் ஹஷேமயிட் இராச்சிய அரசின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்பான அமைச்சுக்கும் இடையில் அரசியல் ஆலோசனைப் பொறிமுறையொன்றை நிறுவுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு மற்றும் ஜோர்தானின் ஹஷேமயிட் இராச்சியத்தின் அரசின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் தொடர்பான அமைச்சுக்கும் இடையில் அரசியல் ஆலோசனைப் பொறிமுறையொன்றை நிறுவுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் அரசியல், பொருளாதார, கொன்சியூலர், தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான ஒத்துழைப்புகள் உள்ளடங்கிய இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல், பலப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்த வரைவுக்கு சட்டமா அதிபரின் உடன்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. கொழும்பு நகர அதிகார இடப்பரப்பினுள் வளிமண்டல வாயு நிலைமையை முகாமைத்துவப் படுத்துதல் தொடர்பான ஆதாரபூர்வமான மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளை மேம்படுத்தும் இயலளவு விருத்திக் கருத்திட்டம்

கொழும்பு நகர அதிகார இடப்பரப்பினுள் வளிமண்டல வாயு நிலைமையை முகாமைத்துவப் படுத்துதல் தொடர்பான ஆதாரபூர்வமான மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளை மேம்படுத்தும் இயலளவு விருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக அனுசரணை வழங்குவதற்கு பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, கருத்திட்டத்தின் தொழில்நுட்பப் பங்காளராக இலாபமீட்டாத நிறுவனமாகிய எயார்பரிஸ் நிறுவனத்தின் மூலம் கருத்திட்டத்திற்கான மொத்த தொகையாக 3,00,000 யூரோக்கள் பெற்றுத்தரப்படும். கருத்திட்டத்தின் ஒப்பந்த வரைவுக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம், எயார்பரிஸ் நிறுவனம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கும் இடையிலான முத்தரப்பு கூட்டு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கும், கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்புகளுக்கு சுற்றாடல் அமைச்சின் செயலாளர் தலைமையில் நெறிப்படுத்தல் குழுவொன்றை நியமிப்பதற்கும் சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தி அகற்றப்படும் (Single Use)) பிளாஸ்ரிக்/பொலித்தீன் கழிவுப்பொருட்களை கட்டுப்படுத்துதல்

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தி அகற்றப்படும் (Single Use) பிளாஸ்ரிக்/பொலித்தீன் 07 உற்பத்திகளை இறக்குமதி செய்தல், நாட்டில் உற்புத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் உள்நாட்டில் பயன்படுத்துதல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட யோசனை 2021.08.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், அதற்கமைய குறித்த யோசனை தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரைகளுடனான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த நிபுணர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் பரிந்துரைக்கப் பட்டவாறு, கீழ்க்காணும் பிளாஸ்ரிக் உற்பத்திகளை இறக்குமதி செய்தல், நாட்டில் உற்புத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் உள்நாட்டில் பயன்படுத்துதல் 2023.06.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் தடை செய்வதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்துகின்ற பானம் அருந்தும் பிளாஸ்ரிக் ஸ்ட்ரோ மற்றும் கலக்கும் உபகரணங்கள், பிளாஸ்ரிக் மூலம் தயாரிக்கப்படும் யோகட் கரண்டி உள்ளிட்ட ஒருமுறை பயன்படுத்தி அகற்றப்படும் பீங்கான், கோப்பை (யோகட் கப் தவிர்ந்த), கரண்டிகள், முள்ளுக்கரண்டிகள் மற்றும் கத்திகள், பிளாஸ்ரிக் மாலைகள், பிளாஸ்ரிக் மூலம் தயாரிக்கப்பட்ட இடியப்பத் தட்டுகள்.

07. இலங்கை மத்திய வங்கி சட்டமூலம்

சட்ட வரைஞர் இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2022 டிசம்பர் மாதம் 19ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

08. 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை நீர் வானூர்தி நிலைய ஒழுங்குவிதிகள்

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாக அமையும் கவர்ச்சிகரமான வர்த்தமாக 2000ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் மிதவை விமானங்களின் தொழிற்பாடுகள் (Float Plane Operations) ஆரம்பிக்கப்பட்டன. தற்போது குறித்த நீர் வானூர்தி நிலைய தொழிற்பாடுகளில் ஒரு தனியார் நிறுவனம் மாத்திரம் ஈடுபட்டு வருவதுடன், எதிர்வரும் காலங்களில் குறித்த துறைசார் நடவடிக்கைகளுக்காக மேலும் பல நிறுவனங்கள் முன்வரக்கூடுமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், நீர் வானூர்தி நிலைய தொழிற்பாடுகளின் தேவைகள் மேலெழுந்துள்ளன. அதற்கமைய, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து சமவாயத்தின் கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகி, 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2022ஆம் ஆண்டு 01ஆம் இலக்க இலங்கை நீர் வானூர்தி நிலைய ஒழுங்குவிதிகள், 2022.08.09ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

09. புதிய மதுவரிச் சட்டமூலத்தை சமர்ப்பித்தல்

மதுசாரம் மற்றும் புகையிலைப் பாவனை, அதனுடன் தொடர்புடைய வர்த்தகங்களை ஒழுங்குபடுத்துதல், குறித்த உரிமப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் வரி விதிப்பனவுகளுக்காக 1912ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தை சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்யப்படவேண்டிய தேவை கண்டறியப் பட்டுள்ளதுடன், மதுவரிக் கட்டளைச் சட்டம் மற்றும் புகையிலை வரிச் சட்டத்திற்குப் பதிலாக புதிய மதுவரிச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதியால் 2022ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, குறித்த கருமத்திற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

10. சுகாதார சேவைகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை உறுதிப்படுத்தி இலங்கையில் சுகாதாரத் துறையின் சுகாதார சேவைகள் விநியோகத் தொகுதியை மேம்படுத்துவதற்காக ஜப்பான், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான வழங்கல்

தற்போது இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு, ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அத்தியாவசிய மற்றும் அவசர சுகாதார சேவைகளை தங்குதடையின்றி மேற்கொண்டு செல்வதை உறுதிப்படுத்துவதற்கான எரிபொருள் (பிரமானமாக டீசல்) விநியோகித்தை உறுதிப்படுத்துவதற்கு 05 பில்லியன் ஜப்பான் யென்களை (அண்ணளவாக 38 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) வழங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. குறித்த வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடைய ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவைத் தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)

துருக்கியைச் சூழ்ந்த துயரம்!

(முனைவர் வைகைச்செல்வன்)

துருக்கி - சிரியாவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் இரு நாடுகளிலும் நேற்றுவரை 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்; 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இந்தக் கொடும் நிகழ்வு நெஞ்சை அறுக்கிறது.

கிழக்கு துருக்கியின் காஸியன்டெப் நகரை மையமாகக்கொண்டு பெப்ரவரி 6 அன்று அதிகாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.8 அலகாகப் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் துருக்கியின் 10 மாகாணங்கள் மற்றும் அண்டை நாடான சிரியாவின் வடக்கு பகுதியில் பேரழிவு ஏற்பட்டுள்ளது. பெரிய நிலநடுக்கத்தைத் தொடர்ந்து துருக்கி - சிரியாவில் அடுத்தடுத்து 312 முறை சிறிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில் 4 அலகு முதல் 7.5 அலகு வரை பதிவாகியுள்ளது.

துருக்கி இராணுவம், காவல்துறை, தீயணைப்புப் படை அனைத்தும் இரவு, பகலாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. சிரியாவின் வடக்கு, கிழக்கு பகுதிகள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. சிரியா அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஓரளவு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், கிளர்ச்சிப் படையின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகள் பேரழிவிலிருந்து மீள முடியாமல் தவித்து வருகின்றன. இந்த எதிர்பாரா நிலநடுக்கம் அந்நாடுகளை நிலைகுலையச் செய்துவிட்டது.

துருக்கியில் இடிந்து விழுந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்களில், குடியிருப்பாளர்கள் நிறைந்த பல அடுக்குமாடி வீடுகளும் அடங்கும். காஸியன்டெப், சிரியா நாட்டின் எல்லையை ஒட்டி அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் பாதிப்புகள் மிக அதிகம். இந்த மிகப்பெரும் நிலநடுக்கத்தை மூன்று நாட்களுக்கு முன்பே ஒருவர் கணித்திருக்கிறார். டச்சு ஆராய்ச்சியாளர் ப்ராங்க் கூகர்பீட்ஸ் என்பவர் துருக்கியில் நிலநடுக்கம் ஏற்படும் என்று மூன்று நாட்களுக்கு முன்பே கணித்து, அதை பெப்ரவரி 3ஆம் திகதியே தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவர் தனது ட்விட்டர் பதிவில், மத்திய மற்றும் தெற்கு துருக்கி, ஜோடான், சிரியா, லெபனான் ஆகிய பகுதிகளைக் குறிப்பிட்டு 7.5 ரிச்டர் அலகு நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று வரைபடத்துடன் குறிப்பிட்டிருந்தமை முக்கியமான ஒன்றாகும். அவர் கணித்ததைப் போலவே துருக்கி - சிரியாவில் 7.8 ரிச்டர் நிலநடுக்கம் ஏற்பட்டு விட்டது.

துருக்கியில் இதுவரை ஏற்பட்ட நிலநடுக்கங்களிலேயே மிகவும் மோசமான நிலநடுக்கம் இதுதான் என்று கூறப்படுகிறது. கனமழை ஒரு பக்கம், கடுமையான பனிப்பொழிவு மற்றொரு பக்கம் என்று இருக்கிற சூழ்நிலையில் மீட்புப் பணி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. உறையும் குளிருக்கு நடுவே சாலையில் முகாம் அமைத்து தங்கியுள்ள குடும்பத்தினர், மீண்டும் தங்கள் வீடுகளுக்குச் செல்லவே அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு சிரியாவில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான சிரியா அகதிகள், முகாம்களில் தங்கியுள்ளனர். இந்தப் பகுதியின் கட்டுப்பாடு, சிரியா அரசாங்கம், குர்தீஷ் படையினர், புரட்சிக்குழுக்கள் என்று மூன்று தரப்பினரிடம் உள்ளது. நிலநடுக்கத்துக்கு முன்பே உறைய வைக்கும் குளிர், கொலரா தொற்றுநோய், மோசமான உட்கட்டமைப்பு ஆகியவற்றால் சிரியா மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனை ஐ.நா. சபை கவனத்திற்கொள்ள வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் கோருகிறார்கள்.

சிரியாவிலுள்ள ஜின்டெரிஸ் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தன் குடும்பத்தினர் 12 பேர் இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்ததாகக் கூறினார். கட்டட இடிபாடுகளுக்கிடையே அவர்களின் குரல் கேட்டது, அவர்கள் உயிருடன்தான் இருந்தார்கள், ஆனால், காப்பாற்ற யாரும் இல்லை என்று தெரிவித்தார்.

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர்அன்டோனியா குட்டெரஸ் சர்வதேச நாடுகளுக்கு உதவி கோரி அழைப்பு விடுத்திருக்கிறார். அந்த அழைப்பை ஏற்று உலக நாடுகளின் உதவிக்கரம் நீண்டுகொண்டிருக்கிறது. நிவாரண முகாம்களுக்கான பொருட்களும், மருந்துகளும் உலக நாடுகளால் அனுப்பப்பட்டுள்ளன. பேரழிவால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் உதவிகளைப் பெறுவதில் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்நிலையில், அப்பகுதியில் மனிதாபிமான உதவிகள் தேவை என்று தெரிவிக்கின்றனர் அப்பகுதி மக்கள்.

ஐரோப்பிய ஒன்றியம் பேரிடர் மீட்புக் குழுக்களை அனுப்பியுள்ளது. நெதர்லாந்து மற்றும் ரோமானியாவைச் சேர்ந்த மீட்புக் குழுவினர் துருக்கிக்கு சென்றுள்ளனர். பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் உதவி செய்வதாக அறிவித்துள்ளன. ரஷ்ய ஜனாதிபதி புட்டின் துருக்கி - சிரியா நாடுகளுக்கு தாராளமாக உதவுவதாக அறிவித்துள்ளார்.

உலகளவில் அதிக முறை நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிற நாடுகளுள் ஒன்று துருக்கி. அந்த நாட்டின் வடமேற்குப் பகுதியில் 1999ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 14 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாயினர். கிழக்கு மாகாணமான எர்ஸின்கன் பகுதியில் 1939ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 33 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கம் சைப்ரஸ், லெபனான், இஸ்ரேல் வரை உணரப்பட்ட மிக மோசமான பாதிப்பாகும்.

அறிவியலின் துணைகொண்டு, நிலநடுக்கம் எந்தப் பகுதியில் ஏற்படக்கூடும் என்பதை முன்கூட்டியே கணிக்க முடிந்தாலும் நிலநடுக்கம் எப்போது ஏற்படும் என்பதை கணிக்க இயலாத நிலையே உள்ளது. இதற்கான ஆய்வுகள் நடந்துகொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நிலநடுக்கம் ஏற்படப்போவதை அறியமுடிந்தாலும் கூட, அதனைத் தடுப்பதற்கு இயலாது என்பதுதான் உண்மையாகும். இது குறித்து ஆய்வுசெய்த நிபுணர்கள், "நிலநடுக்கம் எப்போது ஏற்படும் என்று கணிப்பது எளிதல்ல. ஆதலால், நீங்கள் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்" என்று கூறுகின்றனர். பூகம்பத்தை எதிர்கொள்வதற்கான திட்டத்தை நாம் எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

டாக்டர் ஸ்டீபன்ஹிக்ஸ், "அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் பகுதியில் நீங்கள் வசிக்கிறீர்கள் என்றால், அவசரத் தேவைக்கு உங்கள் வீட்டில் எப்போதும் ஒரு பையைத் தயாராக வைத்திருக்க வேண்டும். அந்தப் பையில் டோச் லைட், முதலுதவிப் பெட்டி இருக்க வேண்டும்" என்கிறார். மேலும் செஞ்சிலுவை சங்கத்தினர், "மக்கள் கொஞ்சம் பணத்தையும், மருந்து சீட்டுகளையும் எப்போதும் தயாராக எடுத்து வைத்திருக்க வேண்டும்' என்று கூறுகிறார்கள்.

அமெரிக்க நாட்டின் அறிவியல் அமைப்பான 'யுனைடட் ஸ்டேட்ஸ்' கூற்றுப்படி, நிலநடுக்கம் ஏற்படும்போது, நாம் இருக்கும் இடத்திலேயே இருந்தால், காயம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு. அதனால் நிலநடுக்கம் ஏற்படும்போது தப்பிப்பதற்காக ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்று புவியியல் ஆய்வு மையம் அறிவுறுத்துகிறது.

நம்மை பத்திரமாக வைத்துக்கொள்வதற்கான ஒரே வழி கீழே படுத்து நம் கால்களைக் கட்டிப்பிடித்துக் கொள்வதுதான் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். உங்களை மறைப்பதற்கு மேஜை இருந்தால் அதன் கீழ் ஒளிந்துகொள்ளுங்கள் என்று அறிவுரை சொல்கிறார்கள். பூகம்பம் ஏற்பட்டால் தப்பிக்கும் வழிகளில் ஒன்று கதவுக்கு மிக அருகில் இருப்பது. ஆனால், பழைய வீட்டில் இருப்பவர்கள் கதவுக்கு அருகே செல்லாமல் மேஜைக்கு அடியில் ஒளிந்துகொள்வதே நல்லது என்று கூறுகிறார்கள். நிலநடுக்கம் ஏற்பட்டால் வீட்டின் ஜன்னல், பால்கனிதான் பெரும்பாலும் முதலில் விழுகின்றன. அதனால், இத்தகைய ஆபத்தான இடங்களிலிருந்து மக்கள் விலகியிருக்க அறிவுறுத்தப்படுகிறது.

நிலநடுக்கம் ஏற்பட்ட பின்னர், இடிந்து விழும் அபாயத்தில் இருக்கும் கட்டடத்திலிருந்து வெளியில் வந்துவிடுவது பாதுகாப்பானது என்று கூறுகிறார்கள். அப்படியானால், வெளியில் இருக்கும்போது என்ன செய்ய வெண்டும் என்று கேட்டால், நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஏனெனில், கட்டடங்களிலிருந்து தப்பித்து ஓடுவது மக்களுக்கு காயம் ஏற்படக்கூடிய அபாயத்தை அதிகரிக்கிறது. ஆகவே, முற்றிலும் திறந்த பகுதிக்குச் செல்வதுதான் சிறந்தது. கட்டடங்களோ, மின்கம்பங்களோ இல்லாத இடத்துக்குச் செல்ல வேண்டும். நிலநடுக்கத்தைக் கணிக்க பூமிக்குள் இருந்து சமிக்ஞை தேவைப்படுகிறது.

ஒரு பெரிய நிலநடுக்கம் வரவிருக்கிறது என்று எச்சரிக்கை செய்ய ஒரு கருவி தேவைப்படுகிறது. ஆனால், அத்தகைய கருவி கண்டுபிடிக்கப்படவில்லை. நிலநடுக்கம் குறித்து முன்னறிவிப்பு செய்யும் கருவி இல்லை என்பது வேதனையளிக்கக்கூடிய ஒன்றாகும். நிலநடுக்கம் என்பது பூமிக்கு அடியில் உள்ள பகுதி அசைவதால் ஏற்படும் கடுமையான அதிர்வாகும்.

யூ.எஸ்.ஜி.எஸ். கூற்றுப்படி, பூமியின் இரண்டு தொகுதிகள் திடீரென்று ஒன்றையொன்று கடந்து செல்லும்போது இது நிகழ்கிறது. இது செஸ்மிக் அலைகள் வடிவில் சேமிக்கப்பட்ட எலாஸ்டிக் ஸ்ட்ரெய்ன் ஆற்றலை வெளியிடுகிறது. அது பூமியில் பரவி நிலத்தை அதிர வைக்கிறது. பூமியின் வெளிப்பரப்பு மேல் ஓடு டெக்டோனிக் தட்டுகளாக உள்ளது. தட்டுகளின் விளிம்புகள், தட்டு எல்லைகள் என்று அழைக்கப்படுகின்றன.

டெக்டோனிக் தகடுகள் எப்போதும் மெதுவான வேகத்தில் நகர்கின்றன. தட்டுகள் ஒன்றையொன்று மோதிச் செல்கின்றன. தட்டுகளின் விளிம்புகள் மிகவும் கடுமையாக இருப்பதால், மற்ற தட்டுகள் நகரும்போது அவை ஒன்றோடு ஒன்று சிக்கிக் கொள்கின்றன. இவ்வாறு தட்டுகள் வேகமாக நகர்ந்து செல்லும்போது நிலநடுக்கம் ஏற்படுகிறது.

நிலநடுக்கம் தொடங்கும் பூமியின் மேற்பரப்புக்கு கீழே உள்ள இடம் ஹைப்போசென்டர் என்றும், பூமியின் மேற்பரப்பில் அதற்கு நேர்மேலே உள்ள இடம் எபிசென்டர்என்றும் அழைக்கப்படுகிறது. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டு சொல்லொணா துயரத்தோடு தவித்துக் கொண்டிருக்கும் மக்களின் வேதனைக்கொரு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

நன்றி – தினமணி

விவசாயி ஒருவரிடமிருந்து பயரிடப்பட்ட நிலப்பரப்புக்கு அமையவே அரசால் நெல் கொள்வனவு செய்யப்படும்

திறைசேரி சுற்றறிக்கையில் தெரிவிப்பு

அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பை விநியோகிக்கும் வேலைத்திட்டம் தொடர்பான சுற்றறிக்கை திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ளது.

2022/2023 பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு நெல் அறுவடைக்கு நியாயமான விலையை வழங்குவதும், மேலதிக நெல்லை அரசாங்கம் கொள்முதல் செய்வதும், தற்போதைய கடினமான பொருளாதார நிலைவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

2022/2023 பெரும்போக நெல் கொள்வனவு செய்யும் திட்டத்தின் கீழ், சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மாவட்ட செயலாளர்களால் நாட்டரிசி வகை நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இதன்படி, அதிகபட்ச ஈரப்பதம் 14% மற்றும் 9% தரம் குறைந்த 01 கிலோ நெல் 100 ரூபாவுக்கும், 14%இனை மிஞ்சும் மற்றும் 22% அல்லது அதற்கும் குறைவான ஈரப்பதம் கொண்ட 01 கிலோ நாட்டரிசி வகை நெல் 88 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும்.

நெல் கொள்முதல் நடவடிக்கையின்போது அது தொடர்பான நெல்லை கையேற்பது, களஞ்சியப்படுத்துவது, அதனுடன் தொடர்புள்ள ஆவணங்களைப் பேணுவது, கணக்குகளை வைத்திருத்தல் ஆகிய பொறுப்புகள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பு உடனடியாக அரியாக மாற்றப்பட்டு 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதால், நெல் குத்தும் பணியை நிறைவுசெய்யும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் நெல் குத்தும் திறனை பரிசீலித்து, நெல்லை கொள்முதல் செய்ய தேவையான பணம், ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பிற்கமைய, விவசாயி ஒருவரிடமிருந்து அதிகபட்சமாக 01 ஏக்கர் வரை 2,000 கிலோவும், 1-2 ஏக்கர் வரை 4,000 கிலோவும், 02 ஏக்கருக்கு மேல் 5,000 கிலோவும் நெல் கொள்வனவு செய்யப்படும்.

சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்படும் அரசாங்கத்தின் நெல் கொள்முதல் திட்டத்தை ஆரம்பிக்கத் தேவையான நிதி குறித்து மாவட்ட செயலாளர்களினால் திறைசேரி அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

இதன்படி, அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் நேரடியாக மாவட்ட செயலாளர்களுக்கு திறைசேரி நிதியை ஒதுக்கத் வரவு-செலவுத் திணைக்களத்திற்கும் தேவையான முற்பணத்தை வழங்க, திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கும் அறிவுறுத்தல் வழங்கப்படும்.

தேசிய வரவு-செலவுத் திணைக்களம் அந்தந்த மாவட்ட செயலாளர்களுக்கு நேரடியாக வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை வழங்குவதுடன், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் குறித்த மாவட்ட செயலாளர்களுக்கு நெல் கொள்வனவு செய்வதற்கான முற்பணத்தை வழங்கும்.

நெல் கொள்முதல் திட்டத்துக்கான நிதி, தேவைக்கேற்ப அவ்வப்போது திறைசேரியால் வழங்கப்படும்.

தங்கள் மாவட்டத்திலுள்ள விவசாயி களிடமிருந்து மாத்திரமே நெல் கொள்முதல் செய்யப்படவுள்ளதை அனைத்து மாவட்ட செயலாளர்களும் கவனத்திற்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட விவசாயிகளின் பெயரில் வழங்கப்பட்ட கட்டணச் சான்றிதழை இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கும்போது, சம்பந்தப்பட்ட வங்கியால் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் தேவையான தொகையை உடனடியாக வரவு வைக்கப்படும்.

பெரும்போகத்தில் கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பு அரிசியாக மாற்றுவதற்கு அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை உள்வாங்கும் வகையில், ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ வீதம் இரண்டு மாத காலத்திற்கு வழங்கப்படும். மேலும் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சால் வெளியிடப்படும்.

நெல் கொள்முதல் திட்டத்தை வெற்றியடையச்செய்ய மாவட்ட செயலாளர்கள் மேற்கொள்ளவேண்டிய, நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதோடு, களஞ்சியத்திலுள்ள நெல் மற்றும் அரிசி கையிருப்புகளை பாதுகாப்பதற்கு சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளை ஈடுபடுத்துதல், நெல் கொள்வனவின்போது செயற்பாட்டுச் செலவுகள் தொடர்பான நிதி விதிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய அரச அனுமதிகளுக்கு உட்பட்டு செயற்படுவதற்கு அதிகாரி ஒருவரை நியமிப்பதும் இதில் அடங்கும்.

கடையொன்றை உடைத்து திருட்டு

(மொனராகலை நிருபர்)

பிபில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அகிரியன்கும்புர கனேவேகல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (13) கடையொன்று உடைக்கப்பட்டு, அதிலிருந்த சுமார் ஒரு இலட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

சில்லறை கடையை மூடிவிட்டு வீட்டுக்குச் சென்ற கடை உரிமையாளர், மறுநாள் காலை திரும்பிவந்து பார்த்தபோது கொள்ளையிடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

கடையில் சோதனை நடத்தியதில், மின் தராக, பால் பவுடர் பக்கெட்டுகள், ரின் மீன்கள், தொலைபேசி கார்ட்கள், சிகரெட், சவர்க்காரக் கட்டிகள் மற்றும் 15 ஆயிரம் ரூபா பணம் போன்றன திருடப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பிபில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குளியாப்பிட்டி நீதவானின் காரை திருடிச்சென்ற சந்தேக நபர் கைது

குளியாப்பிட்டி நீதவான் சம்பத் ஆரியனேவுக்கு சொந்தமான மியிபந்தலை, மடபாத்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினை கூலிக்கு பெற்றுக்கொள்வதைபோன்று சென்று அவருடைய காரை கொள்ளையிட்டார் என்ற சந்தேகத்தின்பேரில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

25 வயதுடைய நபர் ஒருவரே கல்கிலை குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொள்ளையிடப்பட்ட கார், வத்தளை ஹுனுப்பிட்டி பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடமிருந்து மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த நபர் உயிரிழந்த பெண் ஒருவரின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட சிம் அட்டையை பயன்படுத்தியே நீதவானுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார்.

வாடகை வீடுகளை பெற்றுக்கொடுப்பதாகவும், வெளிநாட்டு பணப்பரிமாற்றம் செய்யப்படும் எனவும், இணையதளத்தில் குறித்த நபர் உள்ளிட்ட சிலர் விளம்பரம் செய்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் காரை கொள்ளையிட்டதன் பின்னர் அதிலிருந்த ஆவணங்களை மீள ஒப்படைப் பதற்கு 5 இலட்ச ரூபா கப்பம் கோரி யுள்ளமையும் தெரியவந்துள்ளது.

வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலி கொள்ளை

பிபில பிட்டகும்புர பிரதேசத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார்சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் திருடிச்சென்றுள்ளதாக கராடுகல பொலிஸார் தெரிவித்தனர்.

20 வயதுடைய இப்பெண் நேற்று முன்தினம் (13) பிற்பகல் பிபில வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் தனது நண்பரைப் பார்க்கச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரின் தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றுள்ளார்.

இந்த தங்கச் சங்கிலியின் மதிப்பு சுமார் 2 இலட்சத்து 12 ஆயிரம் ரூபா என பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கராடுகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

50 இலட்ச ரூபாவுக்கு இரண்டு யானைத் தந்தங்களை விற்க முயன்றவர் கைது

சுமார் 4 அடி உயரம் கொண்ட இரண்டு யானைத் தந்தங்களை 50 இலட்ச ரூபாவிற்கு விற்பனை செய்ய முற்பட்ட நபரொருவர் கைதுசெய்யப்பட்டதாக பாணந்துறை வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

மாத்தறை பிரதேசத்தில் நபர் ஒருவர் இரண்டு ஜோடி யானைத் தந்தங்களை விற்பனைசெய்ய உள்ளதாக பாணந்துறை வலான மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உதய குமாரவிற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் பரிசோதகர் மகேந்திர பெரேரா தலைமையிலான குழுவினர் மாத்தறைக்கு சென்று, யானைத் தந்தங்களை வைத்திருந்த நபரை தொலைபேசியில் தொடர்புகொண்டு, மாத்தறை பிடபெத்தர பிரதேசத்தில் உள்ள விகாரைக்கு அருகில் வரவழைத்து கைதுசெய்துள்ளனர்.

யானைத் தந்தத்தை விற்பனை செய்பவர்கள் ஒருதிட்டமிட்டப்பட்ட குழுவாகஇயங்குவதுடன், தந்தத்துக்கான உரிமையாளர் இல்லாமல் தந்தத்தை கொள்வனவு செய்பவரிடம் காட்டுவதற்காக இருவர் வந்ததுடன், கொள்வனவுசெய்ய வந்தவர் இணக்கம் தெரிவித்தால் மட்டுமே உரிமையாளர் நேரில் வருகின்றமை தெரியவந்துள்ளது.

யானைத் தந்தத்தை கொள்வனவுசெய்ய வந்த குழுவினரில் ஒருவருக்கு மட்டுமே அதனைப் பார்க்க அனுமதியளிக்க முடியுமென்று தெரிவித்து, யானைத் தந்தம் விற்பனை செய்யும் குழுவினரில் இருவர், யானைத் தந்தத்தை கொள்வனவுசெய்ய வந்தவர் வியாபாரியைப் போல மாறுவேடமிட்ட பொலிஸ் என அறியாமல் ஒருவரை மோட்டார்சைக்கிளில் பிரதான வீதியிலிருந்து உள்வீதி வழியாக காட்டுப் பாதையில் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்துக்கு அழைத்துச் சென்று யானைத் தந்தங்களைக் காட்டியுள்ளனர்.

ஐம்பது இலட்ச ரூபாவுக்கு தந்தங்களை கொள்வனவுசெய்ய இணங்கியதையடுத்து, அந்த ஜோடி தந்தங்களின் உரிமையாளர் எனக் கூறி ஒருவர் அந்த இடத்திற்கு வந்ததுடன், மற்றைய இருவரும் அந்த இடத்தை விட்டுச்சென்றுள்ளனர். இதன்போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேருவளை அம்பேபிட்டிய அஸாபிருள் ஜென்னாஹ் அல்-குர்ஆன் மத்ரஸாவின் வருடாந்த பரிசளிப்பு விழா

(பேருவளை நிருபர்)

பேருவளை அம்பேபிட்டிய அஸாபிருள் ஜென்னாஹ் அல்-குர்ஆன் மத்ரஸாவின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் விடுகை வருட மாணவர் பட்டமளிப்பு விழா அல்-ஹுமைரா தேசிய பாடசாலை எஸ்.எம்.ஜாபிர் ஹாஜியார் நினைவு மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக சீனன் கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினரும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரு மாகிய அஷ்ஷேய்க் இஹ்சான்டீன் (நளீமி) கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக திருமதி ஹஸ்னா அஸ்ரி, விசேட அதிதிகளாக Dr.அஸ்தாப் பாருக், ஓய்வுபெற்ற அதிபர் எம்.எம்.எம்.சபார் ஆசிரியர், திருமதி ரஸ்னா ராமில், திருமதி பொவ்சியா இசாமுதீன் மற்றும் நதீபா நளீர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் 2021, 2022ஆம் ஆண்டுகளில் எமது மதரஸாவில் 4 வருட தஹ்ளீமும் குர்ஆன் பாடத்திட்டத்தை நிறைவுசெய்த 32 மாணவர்களுக்கான விடுகை சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், கடந்த வருட ரமழான் மாதத்தில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், மத்ரஸாவின் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் நடத்தப் படுகின்ற போட்டிகளில், 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப் பட்டன.

அத்துடன், மதரஸாவில் கல்விகற்ற பழைய மாணவர்களும் ஊர் இளைஞர் களும் இணைந்து 'தெளிவு' எனும் மகுடத்தில் போதை பாவனைக்கு எதிரான விழிப்பூட்டல் நாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டமை நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

யால தேசிய பூங்காவில் ட்ரோன் கெமரா கண்காணிப்பில் 4 கஞ்சா சேனைகள் முற்றுகை

(கெலும் குணதிலக்க)

யால தேசிய பூங்காவில் புத்தல பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குழுவினரின் கற்றிவளைப்பில் நான்கு கஞ்சா சேனைகள் முற்றுகையிடப்பட்டன.

பெப்ரவரி 10 முதல் 13ஆம் திகதிவரை கடந்த நான்கு நாட்களாக டிரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த கஞ்சா சேனைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யால தேசிய பூங்காவின் லோலுவாகல பிரதேசத்தில் தலா ஒரு ஏக்கரில் மூன்று கஞ்சா சேனைகளும் சுமார் ஒரு ஏக்கரில் ஒரு கஞ்சா சேனையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

10 அடி உயரம் வரை வளர்ந்திருந்த சுமார் 26 ஆயிரத்து 200 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டு, வெட்டி எரிக்கப்பட்டுள்ளன.

Job Vacancies

Digital Marketing Executives
Company: Thunder & Neon Group
Email: careers@thunder.lk

Office Assistant – Female
Company: Inso Systems
Email: senura.inso.india@outlook.com

Brand Executives
Company: St. Anthony's Consolidated (PVT) Ltd.
Email: vacancy@stanthys.lk

Sales Staff
Company: Zuzi, Clothing Store
Location: Wattala
Email: hrm@zuzi.lk

Deputy Chief Information Officer
Company: Abans Finance PLC
Email: careers@abansfinance.lk

HR Executive
Company: BH BPO Service (PVT) Ltd.
Email: careers@bdo.lk

Project Coordinator
Institution: IOM – UN Migration
Email: https://srilanka.iom.int/careers

Sales Officers
Company: Global Vinyl PVT Ltd
Email: careers@globalvinyl.lk

Administrator
School: Zahira College, Colombo
Web: www.zahiracollege.lk

Post of Peon
Institution: High Commission of India, Colombo
Email: admn2.colombo@mea.gov.in

Deputy Executive Director
Institution: FPA Sri Lanka
Email: careers@fpasrilanka.org

Field Officer
Location: Kaluthara
Email: careers@lankacanneries.com

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது ஜனாதிபதிக்கு ஆப்பிழுத்த குரங்கின் கதையாக அமைந்துவிட்டது

ஸ்ரீல.மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம்

(ஏறாவூர் செய்தியாளர்)

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது ஜனாதிபதிக்கு ஆப்பிழுத்த குரங்கின் கதையாக அமைந்துவிட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போதைய நிலையில் தேர்தலை நடத்தினாலும் ஜனாதிபதிக்கும் அவரது கட்சிக்கும் ஆபத்து உள்ளது என்றும் நடத்தாவிட்டாலும் ஆபத்து இருக்கிறதெனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர சபை மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) ஏறாவூர் பிரதேசத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற விவகாரத்தில் நாங்கள் ஏனைய கட்சிகளுடன் இணைந்து அழுத்தங்களைக் கொடுத்துவருகின்றோம். தேர்தலை நடத்துவதற்காக எதிர்த்தப்பிலுள்ள ஏனைய நேசசக்திகளுடன் சேர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றோம். இதில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. ஏனெனில் ஜனநாயக நாடொன்றில் கோடிக்கணக்கான பணத்தை எத்தனையோ விடயங்களுக்கு செலவிடுகின்ற அரசாங்கம், தேர்தலை நடத்துவதற்கு மட்டும் நிதி இல்லை என்ற நொண்டிச்சாட்டை சொல்லி தேர்தலை இழுத்தடுப்புச்செய்வது நிச்சயமாக அவர்களுக்கு ஆபத்தான விடயமாகும்.

தேர்தலை நடத்துவதன்மூலம்தான் ஜனாதிபதிக்கு இருக்கின்ற கொஞ்ச நம்பகத்தன்மையையாவது பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனை எதிர்பார்க்கின்றோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டுக்கட்சி என்று ஜனாதிபதிக்குத் தெரியும். இருந்தபோதிலும் நாங்கள் ஜனாதிபதியுடன் தேவையற்ற முரண்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதில்லை. தற்போதைய ஜனாதிபதி எமது அரசாங்கத்தில் பிரதமராகவும் இருந்தவர். அரசியலில் நீண்டகாலமாக தனக்கு ஜனாதிபதி பதவி கிடைக்குமா என்று இவ்வளத்தகளிலோ இருந்தவருக்கு இப்போது ஜனாதிபதி பதவி கிடைத்திருப்பது எமக்கும் சந்தோஷம். ஆனால், அவர் வங்குரோத்து நிலைக்கு வந்து தேர்தலை இழுத்தடிப்பது அவருக்கும் சங்கடமான நிலைதான். இவ்வளவு தூரம் வந்துவிட்ட விவகாரத்தை இனியும் இழுத்தடிப்பது சிரமம்தான். எனினும், தேர்தலை நடத்துவதன்மூலம் சந்திக்கின்ற ஆபத்தைவிட நடத்தாமல் இருப்பதனால் ஏற்படும் ஆபத்துக்கு முகம்கொடுக்க முடியும் என்ற அசட்டு தைரியம் ஜனாதிபதிக்கு இருப்பதுபோலவே தெரிகிறது - என்றார்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

மட்டக்களப்பு நாவலடி காயத்ரி பீடத்தில் சிவராத்திரி விழா

(புளியந்தீவு செய்தியாளர்)

மட்டக்களப்பு நாவலடி காயத்ரி பீடத்தில் சிவராத்திரி தினத்தில் சிவலிங்கத்திற்கு புனித நதிகளின் தீர்த்த அபிஷேகமும் மகா யாகமும் இடம்பெறுமென காயத்ரி பீடத்தின் மூதவை உறுப்பினர் த. குணரெட்னம் தெரிவித்தார்.

காயத்ரி பீடமும், சப்தரிஷி வளாகமும் காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகளால் நிர்மாணிக்கப்பட்டது. சிவபாலயோகி மகரிஷி ஸ்தாபித்த பசுபதி லிங்கம் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அந்த லிங்கத்திற்கும், சப்த ரிஷிகளுக்கும் குருநாதருக்கும் இந்தியாவின் புனித நதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தங்களினால் அபிஷேகமும், மகாயாகமும் நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

சிவராத்திரி நிகழ்வின் பிரதான அம்சமாக சிவாகம பண்டிதர் சிவானந்தஜோதி அம்மையாரின் விசேட சொற்பொழிவும், காயத்ரீபீட அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளின் சமயச் சொற்பொழிவுகளும், நாடக நாட்டியங்களும், மட்டக்களப்பு சைவநெறிக் கழகத்தின் திருவாசக முற்றோதலும் இடம்பெறும். மறுநாள் காலை அன்னதான நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்தாண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கிண்ணியா அல்-இர்பான் கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து தோற்றிய எஸ்.முஹம்மட் சஹரி (154), எஸ்.அன்பா சபி (144), ஏ.அகமட் அம்று (109) மற்றும் ஆர்.பாத்திமா கனா (83) ஆகியோர் கௌரவிக்கப்பட்ட நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஆர்.ராஜகான் தலைமையில் இடம்பெற்று. நிகழ்வில், கிண்ணியா வைத்தியசாலையின் மனோதத்துவ வைத்தியர் எம்.நில்மி, பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (கந்தளாய் செய்தியாளர்)

காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(கந்தளாய் செய்தியாளர்)

தோப்பூர் பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று செவ்வாய்க்கிழமை (14) அதிகாலை 3.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தோப்பூர் - அல்லைநகர் 09 எனும் கிராமத்தைச் சேர்ந்த குப்பைத்தம்பி அப்துல்காதர் என்ற 83 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். குடியிருப்புக் காணியில் நுழைந்த காட்டு யானை வீட்டிலிருந்த தென்னைமரத்தை சாய்த்து சேதப்படுத்தியுள்ளது. அப்போது சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியே வந்த குறித்த நபர், யானையை சீன வெடி வெடித்து துரத்த முயற்சித்துள்ளார். இதன்போது கோபமடைந்த யானை அவரை துரத்தி வீட்டுக்குள் நுழைந்தபோது அவரை வீட்டுக்குள் வைத்து தாக்கியதில் இந்த பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சமயத்தில் அவரது மனைவியும் உடனிருந்துள்ளார். மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு

நீதி வழங்கக்கோரி 18ஆம் திகதி போராட்டம் நடத்த ஏற்பாடு

(வெல்லாவெளி செய்தியாளர்)

'இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்கள்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பில் மக்கள் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

நாட்டில் 'படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குங்கள்' என்ற தொனிப்பொருளிலான மக்கள் போராட்டம் எதிர்வரும் சனிக்கிழமை 18ஆம் திகதி காலை 10.30 மணியளவில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெறவுள்ளது.

அனைத்து அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள், தமிழ் உணர்வாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ். ஊடக அமையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் சங்கம் மற்றும் தேற்கு ஊடக அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இப்போராட்டத்தில் பங்குகொண்டு தங்களது ஆதரவையும் வழங்கி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைப்பதற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு, கல்முனை பதியறையும் அருள்மிகு கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் அமைந்துள்ள சித்தர் சமாதிக்கு 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை சித்தர் மரபுப்படி திருமுறை வழியில் மகாகும்பாபிஷேகம் இடம்பெற்று, மூவாயிரம் ஆண்டுகள் பழமையான கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் அமைந்துள்ள சித்தர் சமாதிக்கான கும்பாபிஷேகத்தை சைவப்புலவர் சி.கா.கமலநாதன் சிறப்பாக நடத்தியிருந்தார். (சாவகச்சேரி செய்தியாளர்)

பட்டிருப்பு தேசிய பாடசாலை மாணவர்களுக்கு கௌரவம்

(நிந்தவூர் செய்தியாளர்)

அகில இலங்கை ரீதியில் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இளம் ஆராய்ச்சியாளர்கள் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் மாகாண மட்டப் போட்டியில் வெற்றிபீடிய பாடசாலைகளுக்கு பரிசு வழங்கி அ.சஜீத், ச.திருத்திகா, வ.பத்ம லோஜனி, சி.தரண்யா ஆகிய மாணவர்களும் இவர்களை சிறப்புற பயிற்றுவித்து வழிகாட்டி தொடர்ச்சியாக விஞ்ஞான ஆராய்ச்சிகளில் முதல் நிலையை தக்கவைத்துக் கொண்டிருக்கின்ற பாடசாலையின் இராசாயன பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை(09) கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் கல்வியமைச்சர் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் வெற்றி பெற்ற பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை), களுவாஞ்சிக்குடி மாணவர்களான ம.தசாப்தன், தி.ஷேம், த.வேதஜா, சு.சுமித்ரா, கோ.சஸ்மியா, ர.கேனுசாந், வியல் பாட ஆசிரியர் செ.தேவகுமாரும் இப்பாராட்டு விழாவில் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், குறித்த மாணவர்களின் ஆராய்ச்சியானது பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமாரின் வழிகாட்டலில் அகில இலங்கை ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட தலைசிறந்த 27 பாடசாலைகளின் ஆராய்ச்சிகளில் ஒரே ஒரு தனித் தமிழ்ப் பாடசாலையாக பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) தடம் பதிக்கச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் தேசிய பாடசாலை அதிபராக திருமதி றிப்கா அன்சார் கடமையேற்பு

(பொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் தேசிய பாடசாலையின் அதிபராக சாய்ந்தமருதைச் சேர்ந்த திருமதி நஸ்லின் றிப்கா அன்சார் நியமிக்கப்பட்டு, உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இவர் சாய்ந்தமருதைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர் முஹம்மது காலிம் - பாத்திமா தம்பதியின் இரண்டாவது மகளாவார். தனது ஆரம்பக் கல்வி, உயர் கல்வி இரண்டையும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கற்ற இவர், அதே பாடசாலையிலேயே ஆசிரியத் தொழிலில் இணைந்து பின்னர் அதிபர் தரத்திற்கு உயர்த்தப்பட்டு சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றினார். இதன்பின்னர் தற்போது சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் தேசிய பாடசாலையின் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

கல்விக் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா முடித்த இவர், கல்விமாணிப் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து, உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறியை கற்று அதிபர் பரீட்சையில் சித்திபெற்று பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறியைக் கற்றுள்ளார். மேலும், முதுமாணிப் பட்டத்திற்காக தன்னை தயார்படுத்திக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் கணினித் துறையிலும் தேர்ச்சி பெற்றமை இவரது நிர்வாக செயற்பாடுகளை இலகுவாக்கியுள்ளது. Motivational Speaker ஆக பல மேடைகளில் பேசியுள்ள இவர், சிறுவயதில் இருந்தே கலை, இலக்கியத் துறையில் இருந்த ஆர்வத்தினால் பல படைப்புகளையும் யாத்துள்ளார். மேலும், சஞ்சிகைகள் மற்றும் பல இணையத்தளங்களிலும் புத்தகங்களிலும் இவரது கவிதைகளும் கட்டுரைகளும் வெளிவந்தவண்ணம் உள்ளன.

'வாழ்வியலில் சில வர்ணங்கள்' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்டுள்ள இவர், மிக விரைவில் கவிதை தொகுப்பு ஒன்றை வெளியிட உத்தேசித்துள்ளார்.

கவித்தீபம், கல்விச்சுடர், கலைத்தீபம், கலைஞர் சுவதம் விருது, இலக்கிய முரசு, Best Service Award, நிலா கவிஞர், செந்தமிழ் சுடர், முத்தமிழ் கலைஞர் விருது, சிந்தனை மாமணி, தீர்த்தகிரியார் வீர விருது, எழுதுகோல் ஆளுமை, எழுத்தொளி சுக்ரா விருது, எழுத்து மணிச்சுடர், பண்களை ஒளிச்செம்மல் விருது, தேவனகிரி கொடிமணி, சங்கே முழங்கு விருது போன்ற இன்னோரன்ன விருதுகளுக்கும் இவர் சொந்தக்காரராவார்.

இவரின் தந்தை ஒரு கவிஞரும் வரலாற்றாய்வாளரும், ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியருமாவார். அத்தோடு, இவரது கணவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராக கடமையாற்றுகிறார்.

புதிதாக நியமனம் பெற்று, கடமைகளைப் பொறுப்பேற்ற நஸ்லின் றிப்கா அன்சார் அதிபருக்கு பாடசாலை சமூகத்தினர் மற்றும் பழைய மாணவர்கள், கல்விச் சமூகத்தினர், பெற்றோர்கள் தங்களது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

சிறந்த ஆளுமையும், தலைமைத்துவ இயல்பும், அனைவரோடும் நேர்மையாகப் பழகும் பண்பும் கொண்ட இவரின் வருகையால் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் தேசிய பாடசாலை மேலும் முன்னேற்றமடைந்து இன்னும் பல சாதனைகளைப் படைக்கும் என பாடசாலையின் பழைய மாணவர்கள், பாடசாலை சமூகத்தினர், கல்விச் சமூகத்தினர் மற்றும் பெற்றோர்கள் நம்பிக்கை வெளிபிட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை ஹைலண்ட் விளையாட்டுக் கழகத்தின் மெய்வல்லுனர் விளையாட்டு வீரர்களுக்கு பாதணிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு அண்மையில் ஹைலண்ட் காரியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம அதிதி கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை கழக வீரர் ஒருவருக்கு பாதணியை வழங்குவதையும் அருகில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், ஹைலண்ட் கழக ஆலோசகர் அஸ்வர் சாலி உள்ளிட்ட அதிதிகள் நிற்பதையும் காணலாம். (படம்: அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

கொக்கட்டிச்சோலை பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த நால்வரின் சடலங்கள் நல்லடக்கம்

(கல்லடி செய்தியாளர்)

கொக்கட்டிச்சோலை பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியர் உட்பட நால்வர் உயிரிழந்த சம்பவத்தில் நீரில் மூழ்கிய மாணவர்களை காப்பாற்றச்சென்றபோது ஆசிரியர் உட்பட நால்வரும் உயிரிழந்திருந்தனர். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 12ஆம் திகதி சம்பவத்திருந்தது.

இந்நிலையில், உயிரிழந்த ஆசிரியர் உட்பட மூன்று மாணவர்களின் சடலங்களும் உடற்கூற்றுப் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அவர்களின் சடலங்கள் 13ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் மட்டக்களப்பு, களுமுந்தன்வெளி கிராமத்திலுள்ள உயிரிழந்த ஒவ்வொருவரின் வீட்டுக்கும் சடலங்கள் கொண்டுசெல்லப்பட்டு, அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இவர்களில் ஆசிரியரான யோகேஸ்வரன் கிவேதன் வர்த்தகத்துறையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து, இலவசமாக தமது பிரதேச மாணவர்களுக்கு மாலைநேரங்களில் கல்வி கற்பித்து வந்துள்ளதுடன், பகுதி நேரமாக தனியார் இணைய வானொலிகளில் அறிவிப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

மாணவர்களான வீரசிங்கம் விதுசன் மூன்று பிள்ளைகளைக்கொண்ட குடும்பத்தில் இரண்டாவது ஆண்பிள்ளை, சத்தியசீலன் தனுஜன் நான்கு பிள்ளைகளைக்கொண்ட குடும்பத்தில் கடைசி ஆண்பிள்ளை, தயாபரன் ரஜிர்த்தனன் இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்த பிள்ளையாவார்.

இவர்களின் குடும்பத்தார், உற்றார் மற்றும் உறவினர்கள் கதறியழ, உயிரிழந்தவர்களின் சடலங்கள் ஊர்வலமாக வீதி வழியாகக்கொண்டு செல்லப்பட்டு, களுமுந்தன்வெளி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பெரும்போக அறுவடையில் நட்டம்: விவசாயிகள் கவலை

(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் தற்போது பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், விளைச்சல் குறைவாக உள்ளதாகவும் நெல்லுக்கான உத்தரவாத விலை இன்மை காரணமாக விவசாயிகள் பெரும் நட்டமடைந்துள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், வெட்டு கூலி, டீசல் தட்டுப்பாடு உள்ளிட்ட பல இன்னல்களையும் தாம் எதிர்நோக்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். கிண்ணியா சூரங்கல் கற்குழி பகுதியில் தற்போது இயந்திரம் மூலமாக அறுவடை இடம்பெறுகின்றது. போதுமான உரமானியம் கிடைக்காமை போன்ற பல குறைபாடுகளால் இம்முறை மஞ்சள்நோய் தாக்கம் ஏற்பட்டு விளைச்சலின்மையால் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளோம்.

அரசாங்கம் விவசாயிகளின் விடயத்தில் கரிசனை காட்டி உதவ வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலய சிவராத்திரி நிகழ்வுகள்

(தேற்றாத்தீவு)

மகாசிவராத்திரி விரத சிறப்பு நிகழ்வுகள் தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்தில் சனிக்கிழமை 18ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளன. கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு சித்தர்களால் நர்மதா நதிக்கரையில் இருந்து கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கும் உயிர் லிங்கத்திற்கு அடியார்கள் ஆலய புனித கங்கையாகிய பாலாறு 'பால புஸ்கரணி' தீர்த்த கங்கையில் தீர்த்த நீர் எடுத்துவந்து தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்யும் சிறப்பு நிகழ்வு காலை தொடக்கம் பின்னிரவு வரை இடம்பெறும்.

இதன்போது தங்களது ராசிகளுக்குரிய அபிஷேக திரவியங்களாலும் அபிஷேகம் பண்ணுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் மேஷம் - வெல்லம் கலந்த நீர், ரிஷபம் - தயிர், மிதுனம் - கரும்புச்சாறு, கடகம் - சர்க்கரை சேர்ந்த பால் மந்தாரை பூ, சிம்மம் - பால், கன்னி - பால் அல்லது நீர், துலாம் - பசும்பால், விருச்சிகம் - தேன் அல்லது சர்க்கரை கலந்த நீர், தனுசு - குங்குமப்பூ கலந்த பால் அபிஷேகம், மகரம் - நல்லெண்ணெய், கும்பம் - இளநீர் அல்லது கடுகு எண்ணெய், மீனம் - குங்குமப்பூ பால் ஆகியவற்றைக்கொண்டு அபிஷேகம் செய்யலாம்.

ஆலயத்தில் நான்கு சாமப் பூஜைகளும் லிங்கோற்பவர் காலத்தில் ஏகாதச ருத்ர மஹா வேள்வியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாலை 6 மணி தொடக்கம் அதிகாலைவரை பஜனை சங்கீதக் கச்சேரி, நடனம், கதாப்பிரசங்கம், சமய பேருரைகள் என்பன இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபான சபை தலைவர் த.விமலானந்தராஜா தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

போடியார் புலம்பல்!

தேர்தல நடத்த காசி
இல்லையாம் எண்டு தேர்தல்
ஆணைக்குழு சொல்லி இருக்கு
எலுவா.? இது கலியாணம் கட்ட
கடன்வாங்கிற கதபோலதான்
இருக்கு.. அந்த நரிக்கும்,
மொட்டுக் கட்சிக்காரனுகளுக்கும்
செல்வாக்கு இல்லை
எலக்சன் நடந்தால் மண்கவ்வ
வேண்டிவரும் எண்டத
அறிஞ்சுதான் எப்படியும் தேர்தல
ஒத்திபோட நொண்டிச்சாட்டுகள்
தேடுறதாக எதிர்க்கட்சிகள்
சொல்லுறதிலயும் நியாயம்
இல்லாமல் இல்ல.. என்ன
சொல்லுறது மெய் எலுவா?

ஐக்கிய நாடுகள் சபை யுனொப்ஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் தம்பலகாமம் பிரதேச செயலகமும் திருகோணமலை மக்கள் சேவை மன்றமும் இணைந்து இருநூறு வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (10) மன்றத் தலைவர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்வதற்கு மரக்கறி விதைகள் மற்றும் விவசாய உள்ளீடுகளும் வழங்கப்பட்டன. (கிண்ணியா செய்தியாளர்)

சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக மாஹிர் தெரிவு

(சம்மாந்துறை செய்தியாளர்)

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் இராஜினாமா செய்தமையினால் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான விசேட அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் சபாமண்டபத்தில் நேற்று(14) இடம்பெற்றது.

அதன் பிரகாரம், பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் வகையில் இடம்பெற்ற அமர்வில் பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிரின் பெயர் மாத்திரமே தவிசாளர் பதவிக்காக முன்மொழியப்பட்டது. இதனால் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏகமனதாக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளராக ஐ.எல்.எம்.மாஹிரின் பெயரை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆறு உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட பத்து உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளித்தனர்.

இதில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி, கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களப் புலனாய்வு உத்தியோகத்தர் விசேட தரம் என்.ஐங்கரன், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், உதவி தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

தண்டப்பணம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மண் ஏற்றிவந்த ரிப்பர் வாகன உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மண் ஏற்றிவந்த வாகனத்தை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த ரிப்பர் வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (14) ஆஜர்படுத்தியபோது 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு சவாலாக வேறு எந்தக் கட்சியும் இல்லை

வேட்பாளர் தட்சணாமூர்த்தி தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

பொதுச் சேவையில் சிறுவயதில் இருந்தே என்னை இணைத்துக்கொண்டவன் நான். இம்முறை மூன்றாம் வட்டாரத்தில் போட்டியிடுகிறேன். கடந்த மூன்று தடவைகளில் இலங்கை தமிழரசுக் கட்சி காரைதீவில் ஆட்சிசெய்து வந்தது. இம்முறையும் 4 வட்டாரங்களிலும் வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் என்பதில் வேறுபட்ட கருத்துகளில்லை - என இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளரும் முன்னாள் தவிசாளருமான கணபதிப்பிள்ளை தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

காரைதீவிலுள்ள அம்பாறை ஊடக மையத்தில் திங்கட் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் பெசில் ராஜபக்ஷ சொன்னார், நாம் வடக்கு, கிழக்கில் படகிலும் வீணையிலும் வருகிறோம் என்று. இவர்கள் எதில் வந்தாலும் வடக்கு, கிழக்கு மக்கள் அவர்களை நிச்சயம் நிராகரிப்பார்கள். எமக்கு சவாலாக எந்தக் கட்சியும் இல்லை. அதற்காக ஏனைய கட்சிகளை தரக்குறைவாக கூறப்போவதும் இல்லை. எமது வெற்றி நிச்சயம்.

ஈழத்து காந்தி என அழைக்கப்படுகின்ற தந்தை செல்வா காரைதீவிற்கு வந்தபோது எனக்கு வயது 13. அன்று நான் உட்பட பல இளைஞர்கள் கையை பிளேட்டால் வெட்டி அவருக்கு இரத்த திலகமிட்டோம். அன்றிலிருந்து இன்றுவரை நான் தமிழரசுக் கட்சியிலேயே தடம் புரளாமல் இருந்துவருகிறேன். 196 பேரை நிறுத்தலாம். சதி செய்யலாம். இலவசங்கள் வழங்கலாம். போலிகள் வரலாம். போகலாம். ஆனால், காரைதீவு மக்கள் தெளிவானவர்கள். படித்தவர்கள். அவர்கள் ஏமாற மாட்டார்கள். தமிழ்த் தேசியத்தில் மதிப்பும் மரியாதையும் உள்ளவர்கள். அதற்கு கௌரவம் அளித்து மதிப்புடன் வாக்களிப்பவர்கள். எனவே வெற்றி நிச்சயம் - என்றார்.

ஆட்சியமைக்க மேலும் ஆசனம் தேவைப்பட்டால் எந்தக் கட்சியுடன் இணைவீர்கள்? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது,

எமது தலைவர் மாவை சேனாதிராஜா அண்மையில் கூறும்பொழுது நாம் தேர்தலுக்காக மட்டுமே பிரிந்து நிற்கின்றோம். பின்னர், இணைந்து ஆட்சியமைப்போம். இது அண்ணன் - தம்பி பிரச்சினை. இது சாதாரணமான பிரச்சினை. நிரந்தரப் பிரிவல்ல. அவர்கள் கடந்த இருபது ஆண்டுகளாக ஒன்றாக இருந்தவர்கள். சகல விடயத்திலும் பங்கெடுத்தவர்கள். எனவே, சந்தர்ப்பம் வரும்போது நாங்கள் குத்துவிளக்குடன் இணைந்தேதான் ஆட்சியமைப்போம். இது தலைமைப்பீடத்தின் முடிவு. எனது முடிவும் அதுதான் - என்றார்.

அரச உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு!

(மட்டக்களப்பு)

வெறுப்புப்பேச்சு மற்றும் வன்முறைத் தீவிரவாதம் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வொன்று மட்டக்களப்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற மக்களின் சமூக ஒன்றிணைவுக்கான உதவித் திட்டத்தின் ஓர் அங்கமான வெறுப்புப்பேச்சு மற்றும் வன்முறை தீவிரவாதம் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் இரண்டு நாள் செயலமர்வானது நேற்று முன்தினம் (13) மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நோர்வே அரசாங்கத்தின் நிதி அனுசரணையுடன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP), பிரெண்டீனா (Berendina) மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்ட செயலகங்களுடன் இணைந்து நடத்தப்படும் குறித்த இரண்டு நாள் செயலமர்வானது, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கிழக்கு மாகாணத்திற்கான திட்ட நிபுணர் கே.பார்த்தீபன் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன்போது மனிதாபிமானம், ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் தாக்கம், வெறுப்புப் பேச்சு, பேச்சு சுதந்திரம், வெறுப்புப் பேச்சின் விளைவுகள், வெறுப்புப் பேச்சினால் ஏற்படும் வன்முறை தீவிரவாதம் தொடர்பான பாதக தன்மைகள், ஊடகங்களின் கடமைகள், வெறுப்பு பேச்சும் வன்முறை தீவிரவாதத்தின் இயக்கிகளும், வெறுப்பு பேச்சை எவ்வாறு இனங்காணல், இலங்கையில் வெறுப்பு பேச்சு தொடர்பாக கையாளப்படும் சட்டங்கள், வெறுப்பு பேச்சை அடையாளம் காணும் விதம் மற்றும் வன்முறை தீவிரவாதத்தை ஏற்படுத்தும் காரணிகள் தொடர்பாக இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த அரச திணைக்களங்களின் 25 உயரதிகாரிகள் கலந்துகொண்ட இச்செயலமர்விற்கு வளவாளராக வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பான அதிகாரம் பெற்ற பயிற்றுனரான ரமனுஷா பூபாலநாதன் கலந்துகொண்டு செயலமர்வினை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

0,000 அடி உயரத்தில் பறந்த மர்மப்பொருள்; சுட்டு வீழ்த்தியது அமெரிக்கா

உளவு பலூனா, ஏலியன்களா?

வட அமெரிக்க வான்பரப்பில் 20,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த மர்மப்பொருளை அமெரிக்க இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது. தொடர்ந்து 4ஆவது மர்மப்பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் அணுசக்தி ஏவுதளம் அமைந்துள்ள மொன்டானா பகுதியில் மர்ம பலூனொன்றை அமெரிக்க இராணுவம் கடந்த முதலாம் திகதி சுட்டு வீழ்த்தியது. இது சீனாவின் உளவு பலூன் என அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. ஆனால், அது வானிலையை ஆய்வுசெய்ய அனுப்பிய பலூன் என சீனா விளக்கமளித்தது.

அதைத் தொடர்ந்து கடந்த 4ஆம் திகதி அலாஸ்கா எல்லையில் 40,000 அடி உயரத்தில் பறந்த சிறிய கார் அளவிலான பலூனை அமெரிக்க இராணுவம் சுட்டு வீழ்த்தியது. பின்னர் கனடா வான்பரப்பில் பறந்த மர்மப்பொருளை கடந்த 11ஆம் திகதி அமெரிக்க இராணுவம் சுட்டு வீழ்த்தியது. இந்நிலையில், வட அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் மாகாணத்தின் ஹூரான் ஏரியின் மீது சுமார் 20 ஆயிரம் அடி உயரத்தில் மர்மப்பொருள் பறப்பது நேற்று முன்தினம் கண்டறியப்பட்டது. எட்டு கோணங்களுடன் இருந்த இந்த மர்மப்பொருளை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் உத்தரவின்பேரில் அமெரிக்க இராணுவம் எவ்-16 போர் விமானம் மூலம் சுட்டு வீழ்த்தியது.

அமெரிக்க வான்பரப்பில் இதுபோல் அடுத்தடுத்து மர்மப் பொருட்கள் பறப்பது பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், முதலில் சுடப்பட்ட சீன உளவு பலூனைப்போல மற்ற பொருட்கள் இல்லை. அதோடு நேற்று முன்தினம் சுடப்பட்ட மர்மப்பொருளில் சோலார் பேனல்களோ, உளவு கருவிகளோ இல்லை என அதிகாரிகள் நம்புகின்றனர். எனவே, இவையும் சீனாவின் உளவு பலூன்களா அல்லது வேற்றுக்கிரகவாசிகளின் பறக்கும் வாகனங்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் அத்துமீறிய 10 அமெரிக்கப் பலூன்கள்

சீன வெளிவிவகார அமைச்சு செய்தித் தொடர்பாளர் வோங் வென்பின் அளித்த பேட்டியில்,

''அமெரிக்க உளவு பலூன்கள் மற்ற நாடுகளின் வான்வெளியில் சட்டவிரோதமாக நுழைவது வழக்கமான விடயம். கடந்த ஓராண்டில் சீன வான்வெளியில் அனுமதியின்றி 10 முறை அமெரிக்கப் பலூன்கள் சட்டவிரோதமாக பறந்துள்ளன. எனவே, அமெரிக்கா முதலில் தன்னைப் பற்றி சிந்திக்கவேண்டும். மோதலைத் தூண்டும் அதன் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்'' - என்றார்.

துருக்கி - சிரியா நிலநடுக்கம்:

"கட்டட இடிபாடுகளில் சிக்கியோர் இனியும் உயிர்பிழைக்க வாய்ப்பில்லை"

உயிர் பிழைத்தோர் உதவிகள் கிடைக்காமல் கடும் குளிரால் பரிதவிப்பு

70 இலட்சம் குழந்தைகள் பாதிப்பு
- துருக்கியில் 46 இலட்சம்
- சிரியாவில் 25 இலட்சம்

துருக்கி, சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 40 ஆயிரத்தை அண்மித்துள்ள நிலையில், அங்கு உயிர் பிழைத்துள்ளவர்கள் போதுமான உதவிகள் கிடைக்காமல் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

மேலும், நிலநடுக்கத்தால் நிலைக்குலைந்துள்ள துருக்கி மற்றும் சிரியாவில் 70 இலட்சம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தால் துருக்கியின் 10 மாகாணங்களில் 46 இலட்சம் குழந்தைகளும், சிரியாவில் 25இலட்சம் குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

மீட்புப் பணிகள் இன்று 10ஆவது நாளாகவும் தொடர்ந்தும் இரவு பகலாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், ''கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ளோர் இனியும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை'' என அஞ்சப்படுகிறது.

துருக்கி மற்றும் சிரியா நாடுகளின் எல்லை பகுதியில் கடந்த 6ஆம் திகதி உள்ளூர் நேரப்படி அதிகாலை 4.17 மணியளவில் ஏற்பட்ட 7.8 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் துருக்கி, சிரியாவின் எல்லை நகரங்களில் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் சீட்டுக்கட்டுகள்போல் சரிந்து விழுந்தன. நிலநடுக்கம் ஏற்பட்டு ஒரு வாரத்துக்கும் மேலாகியுள்ள நிலையில், துருக்கியில் 182 மணிநேரத்துக்குப் பின்னர் நேற்று இடிபாடுகளிலிருந்து ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

இதேபோல் உயிருடன் மீட்கப்பட்டவர்கள் குறித்த பல செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்ற நிலையில், உறைய வைக்கும் கடும் குளிர், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இடிந்த நிலையில் இனி இதேபோன்று யாரும் உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது. நிலநடுக்கம் மற்றும் அதன் பிறகு ஏற்பட்ட நில அதிர்வுகளால் இரு நாடுகளிலும் மொத்த பலி எண்ணிக்கை 40 ஆயிரத்தை அண்மித்துள்ளது.

தரைமட்டமான கிராமம்

நிலநடுக்கம் மையம்கொண்டிருந்த பகுதியிலிருந்து 100 கி.மீ. தொலைவிலுள்ள போலட் என்ற கிராமத்தில் அனைத்து வீடுகளும் இடிந்து விழுந்துள்ளன. ஆனால், அந்தப் பகுதியில் வீடுகளை இழந்தவர்கள் வசிப்பதற்கு டென்ட் போன்ற எந்த வசதியும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கின்றனர். இதனால் குளிரில் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். துருக்கியின் பல பகுதிகளிலும் அதேபோன்ற நிலைமையுள்ளது.

மெக்சிக்கோவின் பல்கலைக்கழக பேராசிரியர் எட்வர்டோ ரீனோசோ அங்குலோ தெரிவிக்கையில்,

''கட்டிட இடிபாடுகளிலிருந்து மக்கள் உயிருடன் மீட்கப்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு'' எனத் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அதிகாரி மார்டின் கிரிபித் தெரிவிக்கையில், ''பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிப்பதில் சர்வதேச சமூகம் தவறிவிட்டது. உதவி வழங்குவதில் சிரியாவின் பல பகுதிகள் புறக்கணிக்கப் பட்டுள்ளன'' - என்றார்.

விற்பனைக்கு வரும் குரோஷியாவின் இதயம்

குரோஷியாவில் இதயம் போல காணப்படும் தீவின் ஒரு பகுதி விற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதய வடிவில் காணப்படும் அட்ரியாடிக் தீவு சுற்றுலாப் பயணிகளால் 'காதல் தீவு' என அழைக்கப்படுகிறது. தீவு மற்றும் அதனைச் சுற்றி ஆண்டுக்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமாக புகைப்படங்கள் எடுக்கப்படுவதாக கூறப்படுகிறது. தீவில் ஹோட்டல்கள், வில்லாக்கள் இல்லை என்றாலும், சுற்றுலாப் பயணிகள் வந்தவண்ணமுள்ளனர்.

ஒரு இலட்சத்து 42 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவுகொண்ட தீவில், 40 ஆயிரம் சதுர மீற்றர் வரை 13 மில்லியன் யூரோக்களுக்கு விற்பனைசெய்ய இருப்பதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்

நியூசிலாந்தை தாக்கிய கெப்ரியேல்: நாடு தழுவிய அவசரநிலை அறிவிப்பு

நியூசிலாத்தில் கெப்ரியேல் (Gabrielle) புயல் காரணமாக அந்நாட்டு வரலாற்றில் 3ஆவது முறையாக தேசிய அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கெப்ரியேல் புயலால் நோர்த்லேண்ட், ஒக்லாந்து உட்பட 6 பிராந்தியங்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. புயலின் வேகத்தால் மரங்கள் வேரோடு சாய்ந்தன. வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. பலத்த காற்றுடன் கனமழையும் பெய்ததால் ஒக்லாந்து உள்ளிட்ட பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. மின் கம்பங்கள் அடியோடு சரிந்ததால் ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. மோசமான வானிலை தொடர்ந்து நிலவுவதால் நூற்றுக்கணக்கான விமானங்களும் இரத்துசெய்யப்பட்டன. இதையடுத்து புயல், மழை மற்றும் வெள்ளம் பாதித்த பகுதியில் மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், கெப்ரியேல் புயல் வட தீவு முழுவதும் வெள்ளம், மண்சரிவு மற்றும் பெரும் கடல் சீற்றங்களை ஏற்படுத்துவதால், நியூசிலாந்து அரசு, வரலாற்றில் மூன்றாவது முறையாக தேசிய அவசர நிலையை அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் விரைவாக உதவிகளைச் செய்வதற்கு ஏதுவாக அவசரநிலை பிறப்பிக்கப்பட்டு இருப்பதாக நியூசிலாந்து அரசு விளக்கமளித்துள்ளது.

நியூசிலாந்தின் வடக்குப் பகுதியில் நிலைமை மோசமாக இருப்பதாகவும் வெள்ளம் காரணமாக பல்வேறு இடங்களில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பியனாகியது கல்ப் ஜெயன்ட்ஸ்

டுபாயில் நடைபெற்றுவந்த இன்டர்நேஷனல் லீக் ரி20 தொடரின் இறுதிப் போட்டியில் டிசர்ட் வைபர்ஸ் அணியை வீழ்த்தி கல்ப் ஜெயன்ட்ஸ் அணி சம்பியனானது. சர்வதேச வீரர்கள் பங்கேற்ற இன்டர்நேஷனல் லீக் ரி20 கிரிக்கெட் தொடர் டுபாயில் கடந்த மாதம் 13ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வந்தது. கல்ப் ஜெயன்ட்ஸ், டிசர்ட் வைபர்ஸ், எம்.ஐ.எமிரேட்ஸ், டுபாய் கேபிடல்ஸ், ஷார்ஜா வாரியர்ஸ், அபுதாபி நைட் ரைடர்ஸ் ஆகிய 6 அணிகள் பங்கேற்றன.

லீக் போட்டியின் முடிவில் ஷார்ஜா மற்றும் அபுதாபி அணிகள் வெளியேறின. அரையிறுதிப் போட்டிகளுக்கு பின்னர் கல்ப் ஜெயன்ட்ஸ் மற்றும் டிசர்ட் வைபர்ஸ் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றன. இறுதிப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய டிசர்ட் வைபர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக ஹசரங்கா 55 ஓட்டங்களும், சாம் பில்லிங்ஸ் 31 ஓட்டங்களும் எடுத்தனர். ஜெயன்ட்ஸ் அணி தரப்பில் பிராத்வெய்ட் 3 விக்கெட்டுகளையும், கைஸ் அகமது 2 விக்கெட்டுகளையும் எடுத்தனர்.

147 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட்டிங் செய்த கல்ப் ஜெயன்ட்ஸ் அணி 18.4 ஓவர்களில் 3 விக்கெட்டை மட்டுமே இழந்து 149 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. அந்த அணியின் கிறிஸ் லின் 50 பந்துகளில் 72 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

ஷிம்ரோன் ஹெட்மேயர் 13 பந்துகளில் 25 ஓட்டங்களை அதிரடியாக சேர்த்தார். ஐ.எல். ரி20 தொடர் நடப்பாண்டில்தான் தொடங்கப்பட்டுள்ள நிலையில், கல்ப் ஜெயன்ட்ஸ் அணி சம்பியனாகி உள்ளது.

கோடிகளில் விலைபோன வீராங்கனைகள்

WOMEN'S PREMIER LEAGUE

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இன்று குஜராத் ஜெயண்ட்ஸ், யுபி வாரியர்ஸ், மும்பை இந்தியன்ஸ், டெல்லி கேபிடல்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் என 5 முக்கிய அணிகளுக்கான மகளிர் பிரீமியர் லீக் ஏலத்தை மும்பையில் 13ஆம் திகதி நடத்தியது. கோடிகளில் ஏலத்தில் விற்கப்பட்ட வீராங்கனைகளின் பட்டியல் மிகவும் விலையுயர்ந்த வீராங்கனை ஸ்மிருதி மந்தனா ரூ. 3.4 கோடிக்கு பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் அணியால் ஏலம் எடுக்கப்பட்டார்.

அதிக விலைக்கு எடுக்கப்பட்ட வீரர்கள் பட்டியலை அட்டவணையாக இங்கே காணலாம்.

WPL ஏலம் 2023 வீரர்கள் பட்டியல்

ஏல விலை ஏலம் எடுத்த அணி
ஸ்மிருதி மந்தனா ரூ. 3.4 கோடி ஆர்சிபி
நொட் ஸ்கிவர் ரூ. 3.2 கோடி UP வாரியர்ஸ்
ஆஷ்லே கார்டனர் ரூ. 3.2 கோடி குஜராத் ஜெயண்ட்ஸ்
ரேணுகா சிங் ரூ. 1.5 கோடி ஆர்சிபி
தீப்தி சர்மா ரூ. 2.6 கோடி UP வாரியர்ஸ்
ஹர்மன்ப்ரீத் கவுர் ரூ. 1.6 கோடி மும்பை இந்தியன்ஸ்
சோஃபி டெவின் ரூ. 50 இலட்சம் ஆர்சிபி
எல்லிஸ் பெர்ரி ரூ. 1.7 கோடி ஆர்சிபி
சோஃபி எக்லெஸ்டோன் ரூ. 1.8 கோடி UP வாரியர்ஸ்
பெத் மூனி ரூ. 2 கோடி குஜராத் ஜெயண்ட்ஸ்
தாலியா மெக்ராத் ரூ. 1.4 கோடி மும்பை இந்தியன்ஸ்
ஷப்னிம் இஸ்மாயில் ரூ. 1 கோடி UP வாரியர்ஸ்
அமெலியா கெர் ரூ. 1 கோடி மும்பை இந்தியன்ஸ்
ஜெமிமா ரோட்ரிக்ஸ் ரூ. 2.2 கோடி டெல்லி தலைநகரங்கள்
ஷஃபாலி வர்மா ரூ. 2.0 கோடி டெல்லி தலைநகரங்கள்
சோபியா டங்க்லி ரூ. 60 இலட்சம் குஜராத் ஜெயண்ட்ஸ்
மெக் லானிங் ரூ. 50 இலட்சம் டெல்லி தலைநகரங்கள்
பூஜா வஸ்த்ரகா ரூ. 1.9 கோடி மும்பை இந்தியன்ஸ்
அன்னாபெல் சதர்லேண்ட் ரூ. 70 இலட்சம் குஜராத் ஜெயண்ட்ஸ்
டீன்ட்ரா டாட்டின் ரூ. 60 இலட்சம் குஜராத் ஜெயண்ட்ஸ்
ஹர்லீன் தியோல் ரூ. 40 லட்சம் குஜராத் ஜெயண்ட்ஸ்
ரிச்சா கோஷ் ரூ. 1.9 கோடி ஆர்சிபி
யாஸ்திகா பாட்டியா ரூ. 1.5 கோடி மும்பை இந்தியன்ஸ்
அலிசா ஹீலி ரூ. 70 இலட்சம் UP வாரியர்ஸ்

எந்தெந்த வீராங்கனைகள் எத்தனை கோடிக்கு ஏலம்..? முழு பட்டியல் இதோ:

மும்பை இந்தியன்ஸ்:
ஹர்மன்ப்ரீத் கவுர் – ரூ. 1.8 கோடி
நொட் ஸ்கிவர்-பிரண்ட் (ENG) - ரூ. 3.2 கோடி
அமெலியா கெர் (NZ) – ரூ. 1 கோடி
பூஜா வஸ்த்ரகர் - ரூ. 1.9 கோடி
யாஸ்திகா பாட்டியா - ரூ. 1.5 கோடி

ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்
ஸ்மிருதி மந்தனா - ரூ. 3.4 கோடி
சோஃபி டெவின் (NZ) - ரூ. 50 இலட்சம்
எல்லிஸ் பெர்ரி (AUS) – ரூ. 1.7 கோடி
ரேணுகா சிங் – ரூ. 1.5 கோடி
ரிச்சா கோஷ் - ரூ. 1.9 கோடி

UP வாரியர்ஸ்
சோஃபி எக்லெஸ்டோன் (ENG) - ரூ. 1.8 கோடி
தீப்தி சர்மா – ரூ. 2.6 கோடி
தஹ்லியா மெக்ராத் (AUS) – ரூ. 1.4 கோடி
ஷப்னிம் இஸ்மாயில் (SA) – ரூ. 1 கோடி
அலிசா ஹீலி (AUS) - ரூ. 70 இலட்சம்
அஞ்சலி சர்வானி - ரூ. 55 இலட்சம்
ராஜேஸ்வரி கயக்வாட் - ரூ. 40 இலட்சம்
ஸ்வேதா செஹ்ராவத் - ரூஇ 40 இலட்சம்
பார்ஷவி சோப்ரா - ரூ. 10 இலட்சம்
எஸ் யாசஸ்ரீ - ரூ. 10 இலட்சம்

குஜராத் ஜெயண்ட்ஸ்
ஆஸ்லே கார்ட்னர் (AUS) – ரூ. 3.2 கோடி
பெத் மூனி (AUS) – ரூ. 2 கோடி
சோபியா டன்க்லே (ENG) - ரூ. 60 இலட்சம்
சினே ராணா - ரூ. 75 இலட்சம்
அன்னாபெல் சதர்லேண்ட் (AUS) - ரூ. 70 இலட்சம்
டியான்ட்ரா டாட்டின் (WI) - ரூ. 60 இலட்சம்
ஹர்லீன் தியோல் - ரூ. 40 இலட்சம்

டெல்லி கேபிடல்ஸ்
ஜெமிமா ரோட்ரிக்ஸ் - ரூ. 2.2 கோடி
மெக் லானிங் (AUS) – ரூ. 1.1 கோடி
ஷஃபாலி வர்மா - ரூ. 2 கோடி
டைட்டாஸ் சாது - ரூ. 25 இலட்சம்
ராதா யாதவ் - ரூ. 40 இலட்சம்
ஷிகா பாண்டே - ரூ. 60 இலட்சம்
மரிசானே கப் (SA) - ரூ 1.5 கோடி

விற்கப்படாத வீராங்கனைகள்:

ஹெய்லி மேத்யூஸ் (WI), சுசி பேட்ஸ் (NZ), டாஸ்மின் பிரிட்ஸ் (SA), லாரா வோல்வார்ட் (SA) டாம்சின் பியூமண்ட் (ENG).

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

மொரோக்கோ டென்னிஸ் வீரருக்கு வாழ்நாள் தடை

135 மேட்ச் பிக்சிங் குற்றங்களை ஒப்புக்கொண்ட யூனஸ் ரச்சிடி, தொழில்முறை டென்னிஸிலிருந்து நிரந்தரமாக தடை செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச டென்னிஸ் ஒருமைப்பாட்டு நிறுவனம் (ITIA) விளையாட்டின் வரலாற்றில் ஒரு தனிநபரால் ஏற்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையை மொரோக்கோ சர்வதேச வீரர் விஞ்சிவிட்டார் என்று சரிபார்க்கப்பட்டது.

தடையுடன், ராச்சிடிக்கு $34,000 (28,000/31,700) அபராதமும் விதிக்கப்பட்டது, மேலும் சுயாதீன ஊழல் எதிர்ப்பு விசாரணை அதிகாரியான Janie Soubliere வழங்கிய தீர்ப்பின்படி, அவர் எந்த அதிகாரப்பூர்வ நிகழ்விலும் பயிற்சியாளராகவோ அல்லது கலந்துகொள்ளவோ முடியாது.

"பெல்ஜியத்திலுள்ள ITIA உடன் இணைந்து சட்ட அமுலாக்க விசாரணைகளைத் தொடர்ந்து ITIAஆல் சமீபத்தில் தடைசெய்யப்பட்ட இரண்டு அல்ஜீரிய வீரர்களுடன் மேட்ச் பிக்சிங்கில் ரச்சிடி ஈடுபட்டார்" என்று அந்த அமைப்பு ஓர் அறிக்கையில் உறுதிப்படுத்தியது.

இரண்டு வீரர்கள் முகமது ஹாசன் மற்றும் ஹூரியா பூகோல்டா, ஹாசன் 29 குற்றங்களில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது, மேலும் 15 குற்றங்களில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பின்னர் பவுகோல்டாவுக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது.

ரச்சிடி டென்னிஸ் வல்லுநர்களின் இரட்டையர் தரவரிசையில் 473ஆவது இடத்தைப் பெற்றதன் மூலம் தனது வாழ்க்கையை முடித்துக்கொண்டார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7